# சிரித்திரன்




மைனர் மச்சான்

மாயன்



பெப்ரவரி

1987


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசோலை மரம்!

## பனம் விதை நடுவோம்
## பணபலம் பெறுவோம்!

பனம் பொருள் அபிவிருத்திச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன்

நகை 24 சுவை 2

மாசி 1987



நிலைக்கண்ணாடி

# இனம் காக்கும் இரத்ததானம்

பூதானம், கோதானம், கன்னிகாதானம், அக்கினி தானம், அன்னதானம், சொர்ணதானம் எனப்பல தானங்கள் செய்தவன் தமிழன். தானம் செய்வதில் பேரானந்தம் கண்டவன் தமிழன்.

அன்னம் சுரந்த அமுதசுரபி அவனது வள்ளன்மை. வாடிய முல்லைக்குப் பொற்தேர் ஈந்தது அவனது வரலாறு. பிள்ளைக்கறி பிரியமாக உண்ண வந்த அடியார்க்கு பிள்ளைக்கறி சமைத்துப் பரிமாறியது அவனது புராணம்.

இன்னும் வீதியோர வீடுகளில் காணும் திண்ணைகள், சுமைதாங்கி, அவன் தர்ம சிந்தனைக்கு சான்றிதழாக இருக்கின்றன. அவனின் தர்மக்கரம் மனிதனுக்கு மட்டும் நீட்டப்படவில்லை. மிருகங்களிடம் அவன் கரம் நீண்டது. நீர்த்தொட்டிகள், ஆவுரஞ்சிக் கற்கள், எல்லாம் அவனின் ஜீவகாருணியத்திற்கு எடுத்துக் காட்டாக இன்னும் இருக்கின்றன.

இனத்தொகை பெருக இடப்பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கின; தர்மம் வழங்க விரித்த கரங்கள் இன்று முஷ்டி முத்திரை பிடிக்க எத்தனிக்கின்றன. அன்று சொர்ணதானம் செய்தவன் இன்று முற்றாக அதை மறக்கவில்லை; நாட்டின் நலம் காக்க தங்கதானம் செய்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இரத்ததானம் செய்வதென்றால் ஆமை தலை கால்களை உள்ளுக்கு இழுத்து ஒளிப்பது போல் இவர்களும் ஒளிப்பதில் விமோசனம் காண்கிறார்கள்.

எமது மக்களில் இரத்ததானம் செய்யும் தர்மமில்லை போராளியே போராளிக்கு இரத்ததானம் செய்துவிட்டு போர்க்களத்தில் போராடும் தர்ம சங்கடத்தில் இருக்கின்றான். ஒரு போராளி இறந்து விட்டால் குடம் குடமாய்க் கண்ணீர் வடிக்கும் நாம் ஒரு ''பயின்'' இரத்தம் அவனைக் காப்பாற்றுவதற்கு வடிக்க முன்வருவதில்லை; சீதனம் சுரண்ட வருவபனுக்கு பூதானம் சொர்ண தானமென்று கொடுக்கின்றோம். ஆனால் எம்மைக் காப்பாற்றப் போராடுபவர்களுக்கு இரத்ததானம் செய்யும் மனோதர்மம் எமக்கில்லை.

போர்க்களத்தில் எமது வீரர்கள் செய்யும் சாஹசங்களையும் சாதனைகளையும் உலகம் அறிந்து வியந்து நிற்கிறது. இந்த வரலாறு படைக்கும் வீரருக்கு நாம் இரத்ததானம் செய்கின்றோமே என்று பெருமைப்படுவதில்லை.


இந்தியர்வைத் தனது கண்ணென நேசித்த இந்திரா அம்மையார் தனது கண்களை இந்தியாவின் கண் வங்கிக்குத் தானம் செய்யுமாறு தனது மரணசாசனத்தில் எழுதியிருந்தார். சீக்கிய மதத்தவர் இரத்ததானத்தை எல்லாத் தானத்திலும் மேலான தானமெனக் கருதுபவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் போயா தினத்தன்று இரத்ததானம் செய்வது ஒரு மததர்மமாக இன்று வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இன்றைய போரில் பொது மக்களையே அரசபடை சுட்டுச் சாய்க்கின்றது. இரத்தமிழந்து உயிர் இழக்கும் மக்களை பொதுமக்களே காப்பாற்ற முன்வரவேண்டும் இரத்தம் மகாவலியெனப் பாயும் எமது மண்ணில் இரத்தவங்கி வற்றா நவக்கிரிக் கிணறு போல் நிறைந்திருக்க வேண்டும்.

கொடைக்குக் கர்ணனென்று பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. நாடு பலவகைத்தட்டுப்பாட்டில் தகிக்கும்போது கொடைநல்க முன்வர வேண்டும். எமது மண்ணில் எமது இனத்தின் இரத்தம் ஆறாய் பாய்கிறது. இரத்த வங்கியும் வற்றாத ஜீவநதியாக நிரம்பி வழிய வேண்டும். எமது இனத்தில் இரத்த பாசத்தைக் காட்ட இதுவே அரிய சந்தர்ப்பம். இரத்ததானம் செய்பத் தவறினால் எமது இனத்தின் தலை எழுத்தே வேறாக மாறிவிடும்.

கோயில்களில் மிருக வேள்வி வெள்ளமும் ஜீவகாருண்ய புத்தமதம் தோன்றுவதற்கு ஒரு காரணம் இன்று தமிழன் இரத்தம் பாய்கிறது. உலகின் ஒரு பகுதியிலும் ஜீவகாருண்யம் பிறக்கவில்லை; எமது இனத்தைக் காக்க நாமே உயிர் தானம் செய்யவேண்டும். இரத்த தானமும் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. சண்முகராசா — இணுவில்

கே. பாவலைப் பொருள் தட்டுப்பாடு காலம்பெரும் லாபம் ஈட்டும் கடைக்காரர் பற்றி உங்கள் கருத்து?

ப, கடையோர்:

□

ச. தயாபரன் — முரசுமோட்டை

கே. தன்இனத்திற்கு எதிராகத் துப்புக்கொடுப்போர் பற்றி உங்கள கருத்து

ப: அவர்கள் மேல் துப்பினுல் துப்பலும் நாணும்

□

இ. சியாமளா — மருதங்கேணி

கே. மாணிக்கவாசகப் பெருமான் பற்றி உங்கள் கருத்து

ப. மணிமொழிப் பெருமான்

□

சு. முருகமூர்த்தி — மன்ஞர்

கே. வறுமை வந்தால்?

ப: இரவு வந்தால் நட்சத்திரம் தெரியும், வறுமை வந்தால் நண்பனைத் தெரியும்

□

வ. கிருத்திகா — கண்டி

கே. பெண்களுக்கு நீங்கள் இன்று கூறும் புத்திமதி என்ன?

ப: இன்றைய சூழ்நிலையில் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பை குளிர் சாதனப் பெட்டியில் பூட்டி வைத்துவிட்டு கராத்தே பயிலவேண்டும்.

□

சு. மயூரன் — கரவெட்டி

கே: தமிழ் மக்கள் இன்று என்ன நிலைவில் இருக்கின்ருர்கள்

ப. கதாநாயகன் எம்மைக் காப்பாற்ற குதிரையில் வருவான் என்று காத்திருக்கின்ருர்கள்.

சி. வேளாவேந்தன் — மட்டக்களப்பு

கே. குருதியில் தோய்ந்த போராளியைக் காணும்போது உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது

ப. குங்குமத்தால் அபிஷேகம் செய்யப் பட்ட விக்கிரகம்போல் தோன்றுகின்றது

□

வி. மதனகோபால் — நுவரெலியா

கே. அமெரிக்க சுதந்திர சிலை உயிர் பெற்ருல்?

ப: ரஷ்யாவில் புகலிடம் தேடும்

□

சி. சிவச்செல்வி — பருத்தித்துறை

கே. பெண்ணென்ருல் பேயும் இரங்குமா?

ப. ஆமியென்ருல் பேயுமிரங்கும் இந்தக் காலம்:

□

மு. மலர்விழி — புத்தளம்

கே. பாசத்துக்குரியவர்கள் இறந்தால்?

ப: காடாத்து வரை கண்ணீர் கொட்டும், காடாத்திலிருந்து எட்டுவரை கண்ணீர் சொட்டும், எட்டிலிருந்து அந்திரட்டி வரை நினைவு தட்டும் — அம்மட்டும்தான்.

□

சி. ராஜமோகன் — கொழும்பு

கே: நாம் எமது மண்ணை இழக்கும் நிலைக்குத்தள்ளப் பட்டதன் காரணம் என்ன?

ப. மண்பற்று வேலிக்குள் மட்டும் இருந்ததால்

□

த: மணிவண்ணன் — பரந்தன்

கே: உலகை எது வாழ வைக்கிறது?

ப. சூரிய ஒளியும் சிரிப்பு ஒலியும்

□

க. ராகவன் — முகத்துவாரம்

கே. கடவுள் எப்போ கண்ணீர் வடிக்கிருர்?

ப: அகதிகள் உள்ள மண்ணில் கல்யாண வீட்டில் மிஞ்சிய சோற்றை மண்ணில் கொட்டும்போது

□

எம். குமரகுரு — மட்டுநகர்

கே: எமது ஞானம் பற்றிக் கூறும்?

ப. நாம் எமது அறிவின் எல்லை தெரியாத அஞ்ஞானிகள்......காணியின் எல்லை தெரிந்த ஞானிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. யசோதை — வேலணை

கே. எதைச் சனியன் பிடித்த முகமெனக் கருதுகிறீர்

ப. ஆமிமுகாமும் அகதிமுகாமும் எமது மண்ணில் இருப்பதைச் சிந்தியாத முகத்தை

★

சி முத்துத்தம்பு — காரைநகர்

கே. எது மென் செயல்?

ப. வாழைப்பழம் உண்பது மென்செயல் தோலை வீதியில் வீசுவது வன்செயல்

★

க. சுலக்சனு — அக்கரைப்பற்று

கே. புவத் ஸ்தாபனம் பற்றிக்கூறும்

ப. புத்தர் உண்மையைத் தேடுவதற்காக ராட்சியத்தை துறந்தார் 'புவத்' ஸ்தாபனம் ராட்சியத்தைப் பாதுகாப்பதற்காக உண்மையை மறைக்கிறது.

★

வி. பரம்சோதி — கல்முனை

கே. அகத்தினழகு முகத்தில் தெரியுமென்கிறார்களே

ப. ஓம்..... அகத்தின் அழகு முகத்தில் தெரியும், அராஜகத்தின் அக்கிரமம் அகதி முகாமில் தெரியும்

★

சி. திருவருட்செல்வி — துன்னாலை

கே. எவன் அறிவாளி?

ப. தன் அறிவையும் தன் அறியாமையையும் அறிந்தவனே அறிவாளி

★

க. அன்பரசன் — மன்னார்

கே. கம்பன் காவியநூல்பற்றிக் கூறும்

ப. அது எழுத்தாணியில் உதிர்ந்த முத்தாணிகள் நிறைந்த பெட்டகம்.

★

சி. மயில்வாகனம் — தும்பளை

கே. எமது தலைவிதி பற்றிக் கூறும்

ப. அரிச்சந்திரன் நாடகம் விடிய விடிய கேட்ட இனம் இன்று காது வலிக்கப் புவத் செய்தி கேட்கிறது

எஸ். ராதை — சுன்னாகம்

கே. யாழ்ப்பாணம் அன்றும் இன்றும்?

ப. அன்று காதில் நயமான நாதஸ்வரகானம் ஒலித்தது......இன்று ஹெலியின் ஒலியில் காதுவலிக்கிறது.

★

சி. திலீபன் — தெல்லிப்பளை

கே. நாம் ஏன் இன்று இருளில் வழிதெரியாது விழிக்கின்றோம்

ப. எமது அரசியல்வாதிகள் மேடையில் கரைந்தார்கள் கலங்கரை விளக்கமாய் வழிகாட்டவில்லை.

★

வ. பெருமாள் — நுவரெலியா

கே. எமது அறிவாளிகளால் நாம் பயனடைந்தோமா?

ப. பட்டுப் பூச்சி தன்னை நூலால் சுற்றி உள் இருப்பது போல் அறிவாளிகள் நூல்களுக்குள் இருக்கின்றார்கள். நாட்டிற்கு இவர்களால் நயமில்லை,

★

க. மூர்த்தி — சண்டிக்குளி

கே. சொந்தக்காலுள்ளவனுக்கும் செயற்கைக் கால் பொருத்தப்பட்டவனுக்கும் உள்ள வேறுபாடு

ப. சொந்தக்காலிருந்தும் பிறரின் புத்தியில் நடப்பவன் கால்நடை. செயற்கைக் காலிருந்தும் சொந்தப்புத்தியில் நடப்பவன் மனிதன்.

★

சி. முருகு — புத்தூர்

கே. எமக்குள் ஏன் இந்தப் பிடுங்கல் பித்தலாட்டம் மகுடியாரே......

ப. உங்களுக்கும் ஒருநாள் மரணம்........எனக்கும் ஒருநாள் மரணம். ஆனால் உங்களுக்கு ஒரு சித்தாந்தம். எனக்கொரு சித்தாந்தம். ஆதலால் இருவரும் சித்தப்பிரமை பிடித்தவர்களாய் பிடுங்குப்படுகின்றோம்.

★

சி. ராஜா — அச்சுவேலி

கே. எரிபொருள் தட்டுப்பாடுபற்றி எமது மக்களுக்கு கவலை இல்லையா?

ப. கல்லோயா எரிபொருள் இருக்க கவலை ஏது ராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிகளும் கூவவேண்டும்.

கோழிகளே!
நீங்கள் ஏன் கூவுவதில்லை?
அதிகார அறைகூவல்
ஆண்களுக்கே சொந்தமென்ற
அலட்சியமா?......
அல்லது
பேடுகள்தானே நாங்களென்ற
பேதமை உணர்வுகளா?......
எதுவாக இருந்தாலும்
அது, சதிகாரர் சூழ்ச்சியென்று
சத்தியமாய் உணர்ந்திடுவீர்
கோழிகளே!
எங்களுடைய தேசத்தில்
சுதந்திர மென்கின்ற
சூரியனை வரவேற்க
இனிமேல்
நீங்களும்தான் கூவவேண்டும்;
பெட்டைகள் தானேயென்று
பேசாமல் இருந்திரென்றால்
முட்டைகள் போடுவதே
உமக்கு முடிவானதாகிவிடும்;
செட்டைகள் உமக்குண்டு
சிறகடித்துப் பறப்பதற்கு
சுதந்திரம் வேண்டி
இனிமேல்
இசகமதிலே கூவிடுவீர்

ஆதிலட்சுமி இராசையா

## சங்கீதச் சிரிப்பு

அப்பு: என்னடா தம்பி! காலப்பிரமாணம் லயத்தோட பலாலி முகாமிலே சுட்டுப்பழகிறுங்கள் போல!

தம்பி: இல்லை அப்பு பலாலிப் பக்கம் கட்டுவன் கோயிலிலே தஷ்ணாமூர்த்தியின் ரேப் போடினம்; அது தான் உந்த லயப்பிரளயம்.

''ஹாஸ்யப்பிரிய''

## தம் பட்டங்கள்

அரசியல்வாதி; நான் உங்களுக்கு ஜே; பி; பட்டம், ஆராச்சிப்பட்டம், முதலியார் பட்டம், எல்லாம் பெற்றுத் தந்து விட்டேன்

வாக்காளர்: ஆனால் நீங்கள் ஒன்றுமட்டும் பெற்றுத்தரவில்லை...

அரசியல்வாதி: என்ன அது

வாக்காளர்; தமிழ் மண்ணிற்கு சுதந்திரம் பெற்றுத்தரவில்லை;

அரசியல்வாதி' ? ? ?

— கவிதா அரஸ் —

## ஓவியத்திற்கு ஒருகதை

இந்த ஓவியத்தில் காணும் பாத்திரங்களை மையமமாக வைத்து சமகாலப் பிரச்சினையை மனதில் கொண்டு கதை எழுதுங்கள் தரமான கதைக்கு கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் 50 ரூபா வழங்குவார், உங்கள் ஆக்கங்களை விரைவில் அனுப்பி வையுங்கள்.

— ஆசிரியர் —



## நேயம் நயந்தவை

அன்னை என்னும் அருள் விளக்கு எனும் தலைப்பில் உங்கள் அன்னைக்கு நீங்கள் தீட்டியிருந்த அஞ்சலி வாசகம் மெய்யாகவே என்னையும் கண்கலங்க வைத்து விட்டது.


நீங்கள் கூறிய அத்தனை கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை இதை அனுபவ ரீதியாக உணர்ந்தவன் நான். நீங்கள் குறிப்பிட்ட மாதிரியே என் அன்னையும் பத்தியங்கள் காத்தாள் பாலூட்டினாள் பள்ளிக்குவைத்தாள் என்னுடைய கொள்ளியையும் ஏற்றுக் கொண்டு போய் விட்டாள்.

எமது அன்னை எங்களை நேசித்த அளவுக்கு நாங்கள் அவளை நேசிக்கவில்லையே என்று அழுதுகொண்டிருந்த எமக்கு நிச்சயமாக உங்கள் அஞ்சலிக்குறிப்பு ஓரளவு ஆறுதலைத் தந்தது. தொடர்ந்தும் கலங்கிக் கொண்டிருக்காமல் அன்னையின் இலட்சியங்களை நிறைவேற்றுவதே அன்னைக்கு நாம் செய்யும் கடனாகும்;

தி. உதயசூரியன் ஊரெழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோள் கொடுப்போம்!



இந்தப் பேனுக்கள் எங்கே?
பக்க வாதத்தால
படுத்துவிட்டனவோ?
..........................................
கூரிய பேனுக்களின்
குரல்வளைகள்
விலாசம் தேடும்
விரலிடுக்குகளுள்
இறுகிவிட்டன போலும்!
கல்லறையில்
பளயம் வைத்து
விடுதலைக்கு
பயணமாகிக் கொண்டிருக்கும்
நம் மண்ணின்
சரித்திரம் வருகின்றது......
கொஞ்சம் தளர்த்துங்கள்!
..........................................
வல்லரசுகளுக்கும்
சவால் விடும்
அந்த
துல்லிய தோள்களில்
துப்பாக்கிகள் விளையாடுகின்றன
அத்தனை புரட்சிக்கும்
வித்திட்ட
இந்தப்பேனு முனை
துப்பாக்கி தாங்கும்
அந்தத் - தோள்களுக்கு
மெல்ல
தோள் கொடுக்கட்டும்
எங்கள் விரல்களின்
விலங்குகளை உடைத்து விட்டால்......
அதோ! அதோ!
அண்மித்து விட்டது
நம் விடுதலை

அருச்சுனு

## எஸ். டி. சுப்புலட்சுமியின் மறைவு

பவளக்கொடியிலே பூத்து திரையுலகில் நறுமணம் வீசிய அழகிய மலர் ஒன்று அண்மையில் உதிர்ந்து விட்டது. இவரைப் பவளக் கொடியிலே அறிமுகம் செய்தவர் அக்காலத்தில் புகழ்பெற்ற திரைப்பட டைரக்டராக விளங்கிய எம். கே சுப்பிரமணியம் அவர்கள் தான்; இவர்தான் எம். கே. தியாகராஜ் பாகவதர், எம். எஸ். சுப்புலட்சுமி முதலான பல முன்னணி நட்சத்திரங்களை திரையுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர். எடுத்த எடுப்பிலேயே எஸ். டி. சுப்புலட்சுமியை பவளக்கொடியிலே கதாநாயகியாக அறிமுகம் சய்து வைத்தார். கதாநாயகன் ஏழிசை மன்னன் எம் கே. தியாகராஜ பாகவதர்தான், படமோ வெற்றியைப்பெற்றது.

இதைத் தொடர்ந்து எஸ். டி. சுப்புலட்சுமியும் டைரக்டர் சுப்பிரமணியமும் சேர்ந்து மதராஸ் யுனேட்டெட் ஆர்டிஸ்ட் கம்பனியை ஆரம்பித்தனர். இவர்கள் கல்கத்தாவில் எடுத்தபடம் ''பக்தகுசேலா'' இந்தப் படத்தில் எஸ். டி. சுப்புலட்சுமி கிருஷ்ணனுகவும் குசேலரின் மனைவி சுசீலையாகவும் இரட்டை வேடம் ஏற்று நடித்தார், தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு பெண் ஆண்வேடம் போட்டு நடித்துப் பெருமை பெற்றவரும் எஸ் டி. சுப்புலட்சுமி யயாகும்; படத்தைத் திரையிடுவதற்கு முன்னர் கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் படம் பார்க்க வருமாறு அழைத்தார்கள கல்கி கிருஷ்மூர்த்தி அவர்களோ ஒரு பெண் கிருஷ்ணனுக நடிப்பதை ஒப்புக் கொள்ளமாட்டேன். ஆகவே நான் படத்தைப் பார்க்கவும் இல்லை; அதைப்பற்றி எழுதப் போவதுமில்லை என்று மறுத்தார்.

அவரைப் படம் பார்க்க அழைத்தவர்களோ விடுவதாக இல்லை; இதனுல் கல்கி அவர்கள் ஒரு நிபந்தனையின் பேரில் படத்தைப் பார்க்க உடன்பட்டார். அதாவது தனது ஐந்து வயது மகள் ஆனந்தியையும் அழைத்துக் கொண்டு படம் பார்க்க வருவதாகவும் ஆனந்தி படத்தைப் பற்றி எதைச் சொல்கிறுளோ அதையே எழுதிவிடுவதாகவும் குறிப்பிட்டார் அதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது எஸ். டி. சுப்புலட்சுமியை ஆனந்திக்குக் காட்டி இந்தப் படத்தில் கிருஷ்ணனுக வருபவர் இந்தமாமிதான் என்று கல்கி குறிப்பிட்டார் ஆனந்தியோ கல்கியைப் பார்த்து ''ஏப்பா பொய் சொல்லுறீங்க இவங்க யாரோ? அவங்க யாரோ" என்று பதில் கொடுத்தாள்.

இதை வைத்துக் கொண்டே கல்கி அவர்கள் பக்தசேலாவைப் பற்றி மிகச் சிறப்பான விமர்சனம் எழுதினுர் இதன் பின் கல்கியின் சொந்தப் படமான தியாகபூமியில் சுப்புலட்சுமி நடித்தார். இவர் தனது பிற்காலத்தில் சில படங்களில் தாய்வேடம் ஏற்றுநடித்துள்ளார் இவர் சில காலம் ஒரு குழு அமைத்து கதா காலட்சமும் செய்திருக்கின்றுர்.

தமிழ்த் திரைப்பட வரலாறு 55 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இவ்வேளையில் அத்துறையானது தனது ஆரம்ப கால சிற்பிகளில் பலரை இன்று இழந்துள்ளது. இந்த வகையில் தனது காத்திரமான பாத்திரப்படைப்பு மூலம் இத்துறைக்கு உரமூட்டிய ஒரு கலைஞரின் இழப்பால் திரையுலகம் ஒரு கணம் சலனமின்றி மௌனம் கொள்கின்றது.

கலாபரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பை நேசிக்கும் நெஞ்சங்கள்!

எனது
இலட்சியம்
பூவைப் போல்
புனிதமானது

ஆனால்
அதன் பாதையோ
முள்ளைப் போல்
முரடானது;

மலையேற
மனங்கொண்டவர்களே!
வாருங்கள்

அதற்காக
மலையேறி
அருள்தேடும்
எவரும்
என்னோடு
வரவேண்டாம்

உயத்தின்
மணிமுடியை
வெற்றிகொள்ளத்துடிக்கும்
இதயங்கள் மட்டும்
என்னோடு வரட்டும்

சோகிகளைச் சேகரிக்கும்
சோப்பேறிகளுக்கு
இங்கே
இடமில்லை

முத்துக்குளிக்கப்
போகின்றேன்
மூழ்கத்துணிந்தவர்களே!
முன்வாருங்கள்

கடல்வேட்டைக்குப்
போகின்றேன்.
கரையோரத்
தூண்டில்போடும்
தூங்கு மூஞ்சிகளே!
தூரத்தள்ளிவி இருங்கள்

திமிங்கிலங்களை
வேட்டையாடும்
நினவு கொண்டவர்களே!
வாருங்கள்

குளிர்காயப்
போகவில்லை.
குமுறும்
எரிமலைக்குழம்பில்
குளிக்கப் போகிறேன்

விட்டில் பூச்சிகளும்
விறகுக் கட்டைகளும்
விலகிப் போங்கள்


ஏனெனில்.....
இது—
ஃபீனிக்ஸ் பறவைகளின்
பட்டாளம்

எனது
இலட்சியம்
பூவைப் போல்
புனிதமானது!

ஆனால்
அதன் பாதையோ
முள்ளைப்போல்
முரடானது!

நடுவில் கிடைக்கும்
நாற்காலிகளில்
உட்காரும்
உத்தேசம்
எனக்கில்லை!

ஏனெனில்.....
எனது
இறுதி இலக்கு
ஒரு
சிம்மாசனம் தான்!



உஸ்மான் மரிக்கார்

## மீசைக்கு வந்த வசை!



கட்டப் பொம்மன் மீசை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரத் துரைக்குமுன் கூனிக்குறுகிக் கும்பிடும்போது.....



பாரதி மீசை வைத்துக்கொண்டு தனி மனிதனுக்குத் துதி பாடும் போது.....



ஹிட்லர் மீசைவைத்துக் கொண்டு அயல் வீட்டுக்காரனுக்கு அடங்கி நிற்கும்போது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான சித்த ஆயுள்வேத மருந்துகளும்,
எண்ணெய் வகைகளும், நம்பிக்கையாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்

- சந்தனம் உடன் யந்திரத்தில் அரைத்தது.
- ராதா மின்சார மருந்து
  தலையிடி, தடிமல், நோவு, பிடிப்புகளுக்கு
- ராதா குரு தைலம்
  தலையிடி, தடிமல், சுளுக்கு வாதம், சளிச்சுரம் முதலிய நோய்களுக்கு
- ராதா மணிமார்க் சந்தனாதித் தைலம்
  கூந்தல் வளர்ச்சிக்கும், சிரசு ரோகங்களுக்கும் உபயோகமானது.
- ❉ சஞ்சீவி மாத்திரை
  சுகபேதியாக பாவிக்க உகந்தது
- ❉ ராதா மணிமார்க் கேசரோக நிவாரணதைலம்
  கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, புழுவெட்டு சொடுகு முதலிய சகலவிதமான கேசரோகங் கட்டும்
- ❉ ராதா பிரமி கூந்தல் தைலம்
  கூந்தல் வளர்ச்சிக்கும், குளிர்ச்சிக்கும், அகால நரையைத் தடுப்பதற்கும் உபயோகமானது
- ❉ ராதா ஓமவாட்டர்
  குழந்தைகளின் வயிற்று வலி, வயிற்றுப்பொருமல், வாந்தி, மாந்தம் பூச்சிக்குணம் முதலிய வயிற்றுக் கோளாறுகளுக்கு
- ❉ கோரோசனை மாத்திரை
  சிறுவர், குழந்தைகளுக்கு, ஏற்படும் மலமந்தம் சளிமுட்டு காய்ச்சல் மற்றும் அனேக நோய்களுக்கு நிவாரணி

# எஸ். சுப்பிரமணியம்

## அண் கொம்பனி

மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைப் பொருட்கள் வியாபாரம்

53, (191) கே. கே. எஸ், வீதி.
யாழ்ப்பாணம்,
22541

160, செட்டியார் தெரு,
கொழும்பு
35825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● குறுநாவல் சென்ற இதழ் தொடர்ச்சி

# உதயத்தை நோக்கி

கே. ஆர். டேவிட்

இடைஇடையே பஸ் நிறுத்தப்பட்டாலும் பிரயாணிகள் சரிவர இறங்கவும் இல்லை - சாப்பிடவும் இல்லை வவுனியாவில் சகலரும் இறங்கிச் சாப்பிடுகின்றனர்... அரைகுறை நிம்மதி!

ஒன்பது மாதங்களின் பின் சுக்குட்டியின் ஆதரவில் நாதன் வயிறாறச் சாப்பிடுகின்றான்;

கிட்டத்தட்ட முப்பது நிமிடங்களின் பின்பு பஸ் வவுனியாவிலிருந்து புறப்படுகின்றது வெளி உலகத் தொடர்பு - வயிறு நிறைந்த சாப்பாடு.....நாதனின் கண்களில் நித்திரை மயக்கம் நிறைந்து போயிருப்பதைச் சுக்குட்டி உணர்கிறான்.

''நாதன்...... இதிலை இருந்தால் சரிஞ்சு கொஞ்ச நேரம் தூங்கலாம்...'' சுக்குட்டி தனது கோணர்சீற்றை நாதனுக்குக் கொடுக்கத் தயாராகுகின்றான்.

இருவரும் எழும்பி இடம்மாறுகின்றனர்.

சுக்குட்டி எதிர்பார்த்தது போல் - நாதன் உறங்குகின்றான். சுக்குட்டி தனக்கு வந்த தூக்கத்தைச் சமாளித்துக் கொண்டு இருக்கின்றான்.

பஸ்கூடப் புதியவேகத்துடன் சென்றுகொண்டிருக்கின்றது.

''உனக்கென்று இந்த மண்ணில் ஒன்றுமில்லை. உனக்கு இந்த மண்ணில் சகலதும் உண்டு..
தனியுடமை அகன்று, பொதுவுடமை நிலவுகின்ற ஒரு நாட்டின் இந்தத் தத்துவத்தைப் பிரான்சில் இருக்கும் போது சுக்குட்டி வாசித்தான். அதை இப்போது நினைத்துக் கொள்கிறான்.

பசியை நீக்கவும் அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும், போராடுகின்ற ஒரு பகுதி மக்கள்... அதற்கு மேலால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடுகின்ற ஒரு இனமக்கள்......

பிறந்த மண்ணில் நிம்மதியாக வாழுவதற்கான ஒரு அமைப்பை - அன்னிய மண்ணில் பெற்று ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ள இங்கு வந்த சுக்குட்டிக்கு திரும்பவும் ஒரு போராட்டம் காத்திருப்பதை இலேசாக உணருகிறான்!

உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரு போராட்டம்! அதன் மறுபக்கத்தில் சுதந்திரமான ஒரு பூமியைப் பெறுவதற்கான போராட்டம்!

அரசியல் அந்தகர்களின் கைத்தடியைப் பிடித்து அவர்களைப் பின்தொடர்ந்த நம்மவர்கள்.

மயிர்க்கணத்தில் ஏற்பட்ட பிளவுகள்...¦இன்று...?

மண்டை வெடித்துச் சிதறுகின்ற சிந்தனை கைகளால் தன்முகத்தை மூடிக் கொண்டு சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைக்க முனைகிறான் சுக்குட்டி......

முளங்காலில் தன் இரு முளங்கைகளையும் குத்தி இரண்டு உள்ளங் கைகளிலும், முகத்தைப் புதைத்து - ஒரு கோழித் தூக்கத்திற்கு தன்னைத் தயார்ப் படுத்துகின்றான்.

சந்ததி கோவிலடியில் வாழ்ந்து - அனாதையாகி நான்கு வருடங்கள் கிறிஸ்தவ ஆலயத்தோடிணைந்த அனாதை விடுதியில் வாழ்ந்த சுக்குட்டி, ரேசப்புவின் உதவியால் அருமைலிங்கத்தாரின் வீட்டுக்கு வந்தான்.

அருமைலிங்கத்தார் முன்பே சுக்குட்டிக்குப் பழக்கப்பட்டவர்.

அருமைலிங்கத்தாரின் வீடு......பாதிரியார் தனது பிரசங்கத்தில் அடிக்கடி கூறுகின்ற மோட்சவீடு பற்றிய விளக்கங்கள்... அந்த மோட்ச வீடாகத்தான் அவன் நினைத்தான்...! அவ்வளவு பிரமாண்டமானது!

''சுக்குட்டி...... அருமைலிங்கத்தார் செல்வாக்கானவர்...... அவரை அண்டியிருந்தியெண்டால் உனக்கு நன்மையுண்டு...''இப்படி ரேசப்பு கூறியதை சுக்குட்டி நினைத்துக் கொண்டான்;

மாதத்தில் பத்து நாட்கள் அருமைலிங்கத்தார் கொழும்பில் நிற்பர் ஏனைய நாட்களில் வீட்டில் நிற்பர்.

கோவில் தீர்த்தக் கேணியடியில் திருவிழாக்காலங்களில் சனங்கள் பிதுங்கி வழிவதைப் போன்று, தினசரி அருமைலிங்கத்தாரின் வீட்டில் சனங்கள் தேங்கி வழிவார்கள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம் தேடுதல், இடமாற்றம் பெறல், பொர்சுக்கடிதம்...... இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சனையோடு வருவார்கள்......

இந்தச் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது சுக்குட்டிக்கும் மனதிலே ஒரு நம்பிக்கை...பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு கருடனைப் பார்த்து சௌக்கியமா என்று கேட்டதைப்போல்...சுக்குட்டிக்குக்கூட இப்போது சிறு துணிவு...அருமைலிங்கத்தாரின் உள்வீட்டாள்... என்ற நினைவு......

''தம்பி அருமைலிங்கத்தாரிட்டை என்ரை விஷயமாய் ஒருக்கா ஞாபகப்படுத்தி விடுங்கோ'' இப்படிச் சிலர் சுக்குட்டியிடம் கூறியதுண்டு.

குஞ்சு -- இவன்தான் அருமைலிங்கத்தார் வீட்டு சிரேஷ்ட தொட்டாட்டு வேலைக்காரன்.

குஞ்சுத்தம்பி - இதுதான் அவனது முழுப்பெயர் - உச்சரிப்பு இலகுக்காக அவனைக் குஞ்சு என்றுதான் எல்லோரும் அழைப்பார்கள்.

கிட்டதட்ட ஐம்பத்தைந்து வயதிருக்கும். அலகிலே கான்ஷர் நோய்வந்து சத்திர சிகிச்சை செய்யப்பட்ட பெரிய தொரு காயம் கடுமையான வேலைகள் செய்ய மாட்டான்;

அனுதை விடுதியில் சுக்குட்டிக்கு ரூசப்பு பிரதம ஆலோசகராக இருந்ததுபோல் - இங்கு குஞ்சுதான் சுக்குட்டிக்கு பிரதம ஆலோசகராக இருந்தான்.

பூக்கன்றுகளுக்கு நீர்விடுவது மீன்வாங்கப்போவது மீன் தொட்டி தண்ணீர் மாற்றுவது, பால் கறப்பது, வருவோர் போவோர்க்குப் பதில் கூறுவது; வயலில் வேலை செய்வது...இப்படி வேலைகள் அவனுக்கு

அருமைலிங்கத்தாரின் வீட்டுக்கும் ரூட்டுக்குமிடையில் மிகப்பெரிய மாமரம் ஒன்று லீவான நேரங்களில் சுக்குட்டி இந்த மாமரத்தின் கீழ் படுத்திருப்பான் சுக்குட்டியோடு குஞ்சுவும் நிட்சயமாக இருப்பான்;

''குஞ்சண்ணை .....ஐயாவிட்டை என்னைப் பற்றிக் கதைச்சீங்களா...''சுக்குட்டி தனது விஷயங்களை குஞ்சு மூலந்தான் கதைப்பிப்பான்.

''பரந்தன் கெமிக்கலிலை ஆக்களை எடுக்கப் போகினமாம்...உனக்கு பிறப்புச் சேட்டிபிக்கேற் இல்லை......அதுதான் என்ன செய்யிறதெண்டு அவர் சொல்லுறர்''


''ஏன் குஞ்சண்ணை ஐயா நினைச்சால் ஒரு பிறப்புச் சேட்டுபிக்கேற் எடுக்கேலாதே......''

''கஸ்டம் எண்டு சொல்லுறர்......''

சுக்குட்டி தனது பெற்றோரை நினைத்து பெருமூச்சு விட்டுக் கொண்டான்!

எந்த வேலைப் பிரச்சனையும் அருமைலிங்கத்தாரின் வீட்டுக்கு வராமல் போகாது - அப்படி வரும்போதெல்லாம் சுக்குட்டி அவதானித்து விடுவான்.-அவதானித்து விட்டால் குஞ்சுவோடு கதைப்பான், குஞ்சு ஒவ்வொரு முறையும் ஏதாவதொன்று கூறுவான்.

## எரிபொருள் தடை



எஜமான்; நான் என்பிஸ்னெஸ் முடிந்துவரச் சமையல் ரெடியாக இருக்க வேண்டும்.

சமையல்காரன்; எரிபொருள் தடை......வீட்டில் மண்ணெண்ணை ஒன்றுமில்லை... .நான் நளமகராஜனு நெருப்பில்லாமல் சமைப்பதற்கு.

''...குஞ்சண்ணை...அப்ப என்ரை முடிவென்ன...'' சுக்குட்டி மிகவும் வேதனையோடு அடிக்கடி இப்படிக் கேட்கத் தொடங்கினன்

''சுக்குட்டி...நீ கோயில் அனுதை விடுதியிலை நாலு வருஷம் இருந்தவன் தானே...''

''ஓம்......''

''...நீ உண்மையாய் அனுதை தானே...''

''ஓம்...குஞ்சண்ணை...,'

''அப்பிடியிருந்தும் ஒரு நாளாவது அந்தக்கடவுள் உன்னட்டை வந்திருக்கிறரா......''

''இல்லை......''குஞ்சுவை ஒரு கேள்விக் குறியோடு பார்த்தபடி சுக்குட்டி பதில் கூறினன்.

''...அதுதான் போகட்டு...உன்னேடை இருந்த ஆருக்காவது...கடவுள் உதவி செய்திருக்கிறரா......''

''அதுவும் இல்லை......''

''அப்படி இருந்தும் சனங்கள் இப்பவும் கடவுளை நம்பிக் கொண்டுதானே இருக்குதுகள்......''

''ஓம்...''

''அது எப்படி......''இப்படி குஞ்சுகேட்டதும் சுக்குட்டியின் முகத்தில் முழுமையானதொரு கேள்வி தேங்கி நிற்பது தெரிகின்றது.

''அது எப்படிக் குஞ்சண்ணை......'' அதே கேள்வியைச் சுக்குட்டி திரும்பிக்கேட்கிறன்.

குஞ்சு தலையைக் குனிந்து மௌனமாக இருக்கிறன்

என்ன குஞ்சண்ணை பேசாமல் இருக்கிறியள்.,....

குஞ்சு தலையை நிமிர்த்தி - சுக்குட்டியின் பரிதாபமான முகத்தைப் பார்க்கிறன் —

மாமரத்தின் உச்சியில் ஒரு மாம்பழத்தை அணில் கொறித்துக் கொண்டிருக்கின்றது; மாம்பழத்துகள்கள் சுக்குட்டியின் காலடியில் வீழுந்து கொண்டிருக்கின்றன சுக்குட்டி தலையை நிமிர்த்தி மாமரத்தின் உச்சியிலுள்ள மாம்பழத்தையும் - அணிலையும் பார்க்கின்றன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சர் இன்னமும் சுக்குட்டியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

தம்பி...... பகுத்தறிவற்ற பிராணியின் சுரண்டல் அப்பட்டமாகத் தெரிகின்றது...... ஆனால், பகுத்தறிவுள்ள மனிதனின் சுரண்டல்கள் அப்படித் தெரிவதில்லை

இதைத்தான் தனது பார்வை மூலம் குஞ்சு கூறுகின்றாரா?...!

குஞ்சுவின் அர்த்புஷ்டியான அந்தப் பார்வையை சுக்குட்டியால் உணர்ந்து கொள்ளமுடியவில்லை.

"சுக்குட்டி...உன்னைப்போலை நானும் ஒரு அனாதை இஞ்சை வந்து பன்னிரண்டு வருஷமாகிது... எனக்குப் பிறகு வந்த எத்தினையோபேர் இஞ்சை நிக்க முடியாமல் போனதற்கு காரணம் அவர்கள் நியாத்தை எதிர் பார்த்தார்கள்...இப்ப நானும் நியாயம் கதைச்சால்... அந்தக்கதை அருமைலிங்கத்தாரின் காதுகளுக்கு எட்டினால்...... நிட்சயமாக நானும் வெளியேற வேண்டித் தான் வரும்..."

"நான் நிட்சயமாக ஆருக்கும் சொல்லமாட்டன் நீங்கள் நம்பிச் சொல்லுங்கோ ......"

குஞ்சு சாதாரணமானவனல்ல உலகம் அடிபட்டவன் - அது மட்டுமல்ல பன்னிரண்டு வருஷங்களாக மிகப் பெரிய அரசியல் கட்சித் தலைவர்களோடு நேரடியாக உறவாடி வருபவன் அருமைலிங்கத்தாருக்கு முதல் இருந்த தலைவரும் இதே வீட்டில்தான் வசித்துவந்தார் அவர் காலமாகிவிட்டார்.

அருமைலிங்கத்தாரின் அறையில் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் புத்தகங்களில் சட்டப்புத்தகங்களைத்தவிர ஏனைய புத்தகங்கள் யாவையும் குஞ்சு வாசித்து முடித்து விட்டான்.

"...தம்பி சுக்குட்டி.......சனங்களோடை தினசரி தொடர்பு கொண்டு வரும் ஸ்தாபனங்களில் மதமும் அரசியலும் முக்கியமானவைகள்......

...மதங்கள்...அது எந்த மதமாக இருந்தாலும்சரி ......சகலமதங்களிலும் மிகவும் ஆழமான, பரந்த கருத்துக்கள் உள்ளடக்கியிருக்கு...மத ஸ்தாபனங்கள் மதத்தின் கொள்கைகளைப் பின்பற்றியிருந்தால் நிட்சயமாக மக்கள் தங்களை உணர்ந்திருப்பார்கள்....ஆனால் இன்று

மதஸ்தாபனங்கள் மதக் கொள்கைகளைப் பின்பற்றாமல் - மதக் கொள்கைகள் மதஸ்தாபனங்களைப் பின்பற்றுகின்றன.......

மாடுகள்தான் வண்டிலை இழுக்கவேணுமே தவிர வண்டிலுக்குப் பின்னால் மாடுகளைக் கட்டி இழுக்கக் கூடாது!....... ..?

அதுபோலத்தான் அரசியலும்......

உலகளாவிய நல்ல கொள்கைகள் இருக்கு...அவைகளுக்குப் பின்னால் நடப்பது கஷ்டம்....அதனால் தங்களுக்கு வசதியான கொள்கைகளைத் தெரிவு செய்து அவைகளைத் தங்களுக்குப் பின்னால் கொண்டு செல்லுகின்றனர்.

......மதமும் சுயநலம்......

......அரசியலும் சுயநலம்......

...மதமும் அரசியலும் பின்னிப் பிணைஞ்சிருக்கு...

......இஞ்சையுள்ள வாழ்க்கை போதுமெண்டால் என்னைப் போலை மௌனமாக இரு...இல்லாட்டி ஏதாவது நீதிநியாயம் கதைச்சால்...அவர்களாகவே உன்னை வெளியிலை அனுப்புவினம்......" குஞ்சு தனது மனத்துள் எத்தினையோ காலமாக அடைபட்டுக் கிடந்த உண்மையை சுக்குட்டிக்குக் கூறிமுடிக்கிறான்.

குஞ்சு கூறிய சகலதையும் சுக்குட்டியால் புரிந்து கொள்ள முடியவில்லை ஆனால், அருமைலிங்கத்தாரை நம்புவதில் பிரயோசனம் இல்லையென்பதை மட்டும் சுக்குட்டி உணர்ந்து கொள்கிறான்.

இங்கிருந்து வெளியேறுவது சுலபம்... வெளியேறி எங்கே போவது?......அதுதான் கஷ்டமான செயல்!

"உனக்கு வயது வந்திட்டுது...சுயமாக ஏதாலும் செய்யப்பார்......" குஞ்சு கூறுகிறான்

"நான் என்னத்தைச் செய்யிறது...... குந்தியிருக்க சொந்தமாக ஒரு இடமில்லை......ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லை மாத்தி உடுக்க உடுப்பில்லை...." சுக்குட்டியின் வார்த்தைகள் வேதனை வெக்கையில் வறுத்தெடுக்கப்பட்டு வெளிவருகின்றன!

"சுக்குட்டி...எனக்கு வயது போட்டுது அதுதான் நான் இஞ்சை கிடக்கிறன் நீ வாழவேண்டியவன் துணிவிருந்தால் குப்பை மேட்டிலை குடிசைபோட்டுக் கொண்

## பாலும் வேலும்



பாலு: இலங்கை அரசாங்கம் இலவசப் புத்தகம் தருவதை நிறுத்திப் போட்டு இலவச வீடியோ கசட் படங்கள் தந்தால் நல்லது.

வேலு: அடுத்த முறை பதவிக்கு வருவதற்காக அதையும் செய்யும்.

— கல்பனாஜி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகூட வாழலாம்......'' குஞ்சர் இப்படிக் கூறியதும் சுக்குட்டியின் சிந்தனை திரும்பி சீதாலட்சுமியின் குடும்பத்தின் திசைப்பக்கம் செல்கிறது.

சீதாலட்சுமி நவநீதன்...கல்யாணி...சுக்குட்டியின் நண்பர்கள்.

சுக்குட்டி அனாதை விடுதியை விட்டு அருமைலிங்கத்தாரின் வீட்டுக்கு வந்தபின்னர் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளில் மீன் வாங்கச் செல்வது முக்கியமானது.

அருமைலிங்கத்தார் வீட்டிலிருந்து புறப்பட்டால் ஒரு சிறிய வயல்வெளி அதை அடுத்து மாதிரிக் கிராமம் ஒன்று அதையடுத்து காக்கைதீவுச் சந்தி சந்தியிலிருந்து ஒருமைல் நடந்தால் மீன்சந்தை - இங்குதான் சுக்குட்டி தினசரி வருவான்.

காக்கைதீவுச் சந்தியிலிருந்து, மீன்சந்தைவரையிலுமான இடைப்பட்ட தூரத்தில், ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் மலைபோன்ற குப்பை மேடுகளைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் தினசரி நகரசுத்தித் தொழிலாளர்களால் சேர்க்கப்படுகின்ற குப்பைகள் இங்குதான் கொட்டப்படுகின்றது.

குப்பை கொட்டுப்படாத சிறுசிறு நிலங்கள் அந்தச் சிறு இடங்களில் சில குடிசைகள் அதற்குள் வாழ்க்கை நடாத்துகின்ற சில மனிதஜீவன்கள்...... கிட்டத்தட்ட பதினைந்துக்கு மேற்பட்ட குடும்பங்கள்...... அந்தப்பதினைந்து குடும்பங்களில். ஒரு குடும்ப அங்கத்தினர்கள் தான்.

...சீதாலட்சுமி...நவநீதன்......கல்யாணி

மலைநாட்டில் நடந்த ஒரு கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு இங்கு வந்தவர்கள்...மலையகத்தமிழர் . தோட்டக்காட்டார் என்ற பெயர் மங்கிப்போய் இப்போது 'குப்பை மேட்டார்' என்ற பெயர் வழங்குகின்றது!

சுக்குட்டி தினசரி நடந்துதான் மீனுக்குச் செல்வன் அப்படிச் செல்லும்போது இவர்களைக் கண்டு, சிரித்து சிறுகச் சிறுகப் பேசி. நண்பனான்......லீவு கிடைக்கும் போதெல்லாம் சுக்குட்டி இங்குதான் நிற்பான்.

சீதாலட்சுமி வீடுவீடாகத் திரிந்து வெற்றுச் சீமேந்துப் பைகளைச் சேகரித்து வருவாள் - அவற்றை வெட்டி சிறு சிறு பைகளாக கல்யாணியும் நவநீதனும் ஒட்டுவார்கள். அந்தப் பைகளை கடைகளுக்குக் கொடுப்பாள் சீதாலட்சுமி.

இப்படி பெரும் முதலற்ற ஒவ்வொரு தொழிலை அந்தக்குடும்பங்கள் செய்கின்றனர்.

'உயிரைக் காப்பாற்றினால் போதும்' என்ற எல்லைக் கோட்டில்தான் அவர்களது வாழ்க்கை சுழன்று கொண்டிருந்தது

சுக்குட்டிக்கும் நவநீதனுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான் இருக்கும் - அருமைலிங்கத்தார் கொழும்புக்குச் சென்று விட்டால் சுக்குட்டிக்கு அதிக லீவு கிடைக்கும். அப்போதெல்லாம் சுக்குட்டியும், நீதனும் தூண்டல் போடப் போவார்கள்......

அப்படி ஒரு நாள் தூண்டலுக்குப் போகும்போது ''நீதன்.........எனக்கெண்டு ஒரு குடி நிலத்தில் வாழ வேண்டும். எண்ட என்ரை ஆசை எப்ப நிறைவேறப் போகிறதோ......''என்று கவலையோடு கூறினான்.

சுக்குட்டி உப்பிடி ஒரு ஆசை என்ரை தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கூட இருந்ததெண்டு என்ரை ஐயா சொல்லுவர் அந்த ஆசையோடையே அலையன் செத்துப் போச்சினம்....அதற்குப் பிறகு என்ரை ஐயாவுக்கும் இருந்தது அவரும் அப்படியே செத்துப் போனார்... இப்ப அம்மாவுக்கும் அந்த ஆசையிருக்கு.......நிறைவேறாத ஆசையள்.......'' நவநீதன் இப்படித்தான் கூறினான்.

''சுக்குட்டி துணிவிருந்தால் குப்பை மேட்டிலை கொட்டில் போட்டுக் கொண்டு கூட வாழலாம்'' என்று குஞ்சு சொன்னபோது சுக்குட்டியின் மனதில் முடிந்து போன பல சம்பவங்கள் ஊறிக் காய்ந்து கொண்டிருந்தன.

அன்று இரவு முழுவதும் சுக்குட்டியால் தூங்க முடியவில்லை.

வேதக் கோவிலில் இருக்கும் ரோசப்பு கடவுளை நம்பவில்லை......அருமைலிங்கத்தாரை சிபார்சு செய்தார், அருமைலிங்கத்தார் வீட்டிலிருக்கும் குஞ்சு......அருமைலிங்கத்தாரை நம்பவில்லை...

''குப்பை மேட்டில்க்கூட வாழலாம்'' என்றுகூறி விட்டார்...

''ஆண்டவன் தீர்த்து வைப்பார் என்றார்கள்......

அதன்பின்...

''அரசியல் கட்சி பிரமுகர் தீர்த்து வைப்பார்,' என்றார்கள்......

ரோசப்புவும் குஞ்சுவும் இரண்டையும் போலிகள் என்கின்றனர்......

''மதக்கொள்கைகளுக்குப் பின்னால் செல்ல வேண்டிய மத குருமார்கள் தங்களுக்குப் பின்னால் மதக்கொள்கைகளைக் கொண்டு செல்கின்றனர்......

....அரசியல் கொள்கைகளுக்குப் பின்னால் செல்ல வேண்டிய அரசியல் தலைவர்கள்...தங்களுக்குப் பின்னால் அரசியல் கொள்கைகளைக் கொண்டு செல்கின்றனர்... இப்படிக் குஞ்சு கூறியதின் சரியான கருத்தை சுக்குட்டியால் உணரமுடியவில்லை.

சுக்குட்டி சமுதாயத்தில் பாலர்வகுப்பு மாணவன் வவுனியாவிலிருந்து புறப்பட்ட பஸ் எத்தனையோ இடங்களில் நிறுத்தப்பட்டு - சோதிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமையென வாழும் இல்லாள்

**மகவம் நடாத்திய கௌரவ விருது வழங்கல் பெருவிழா**
**வாழும் கலைஞரை வாழ்நாளிலே வாழ்த்தும் இலட்சியவிழா**

மஹாகவி பரதியார் வாழ்ந்த காலத்திலேயே அன்னாரின் பெருமை பேணப் படாமையை உணர்ந்த மக்களும், அறிஞர்களும், கழிவிரக்கப்பட்டார்கள். அப் புத்துணர்வின் உத்வேகம் கடந்த சிலதசாப்தங்களாக புலவரின் சிந்தனைகளைத் திசை திருப்பியதன் பலனே மகவம் (மதிகலைஞர் வட்டம்) எடுக்கும் முயற்சிகளின் பெறுபேறாகும். எல்லாரதும் சிந்தனைகளைத் தன்பக்கம் ஈர்த்துப், புதியதடம் பிடித்து நடக்கும் மகவம் இவ் வாண்டில், எவரும் சிந்திக்காத, சாதனைப் படுத்தாத முற்றிலும் புதிசான ஒரு விழா எடுத்தது. அதன் இலட்சியத்தை செயற்பாட்டை முன்கூட்டியே சிந்தித்து எவரும் முனையாத ஒரு நெறியைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டமை தலை சிறந்த அறிஞர்களையும், கலைஞர்களையும், சுவைஞர்களையும், பொதுமக்களையும் கவர்ந்தே விட்டது. படாடோபமற்ற, ஆடம்பரம் போற் தெரிந்தும், தெரியாத இவ்விழா பத்தாண்டுக்கு மேலாகச் சிறந்த வாழ்க்கைத் துணைநலமாய் வாழ்ந்து வரும் திருமதி. பவானி மகாதேவன் அவர்களுக்கு. ''வாழ்க்கைக் கலைமணி'' என்னும் கௌரவ விருது வழங்கி, பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கித் தமிழ்ப் பண்பாட்டையும், பெண்மையையும் பேணிய சிறப்பாகும்.

நெஞ்சிலுற்ற நல்ல கருத்துக்களை, செய்கையில் நாட்டல் நீசமன்று மறக்குலமாட்சியாமென்ற பாவேந்தனின் வாக்கும் சிந்தனைக்குரியது. இவ்விழா நாளது 25 - 10 - 86 சனி மு. ப. 9 - 30 மணியளவில், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வேல் அமிர்தன் தலைமையில் (தலைவர் மகவம்) நடைபெற்றது. துவக்கவுரை வழங்கிய தெல்லி. ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு சி. சிவமகாராசா அவர்கள் பெண்களின் பெருமையை, பண்டைத் தமிழினத்தினின்று வேறுபடுத்திப் பார்க்க முடியாதபடி பழைய இலக்கியங்கள் பேசியுள்ளன என்றாலும் அதற்கு இலக்கணமாய்த் திகழும் திருமதி. பவானி மகாதேவனவர்களைப் பாராட்டுவதால் மக்களுக்காக, மக்களால் இயங்கும் நமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒருபடி மேலே தன்னை உயர்த்திக் கொண்டதென்ற கருத்துரையை வழங்கினார்கள், தலைமையுரையிலேயே மகவம் மதி அக்கடமி என்பவற்றின் நடைமுறைச் செயற்பாடுகளையும், இக் கௌரவிப்பு என்ன அடிப்படைகளை ஆதாரமாக வைத்துச் செய்யப்பட்ட தென்பதையும் 1987ல் ஈழத்தமிழக அதிசிறந்ததவில்வித்துவான் கௌரவிக்கப்பட இருப்பதாயும் அதற்குப் பொதுமக்களும், ஸ்தாபனங்களும் உயர்கல்விச் சேவையாளர்களும், கலைஞர்களும், ரசிகர்களும் தம்து பங்களிப்பையும், ஒத்தாசையையும் நல்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் சமுதாயத்தின் முன் வைத்துப் பேசினர்.

சிறப்புரை வழங்கிய யாழ் பல்கலைக்கழகத்தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரமவர்கள் மற்றவர்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குமகவம் இப்படியொரு பெருவிழாவை, திருமதி பவானி மகாதேவா அவர்களைப் பாராட்டும் வகையில் எடுப்பதற்காக முதல் நாம் பாராட்ட வேண்டியது மகவத்தையே என்று அழுத்தம் திருத்தமாகச்சொல்லித் தமது உரையில் மேலும், நம்சமுதாயத்தின் பல்வேறு துறைகளும் பேணப்பட வேண்டிய, கட்டிக் காக்க வேண்டிய, வளர்க்க வேண்டிய, சிறப்பாகத் தீவிரமாக இயங்க வேண்டிய இக்கட்டான இக்காலகட்டத்தில் இவ்விழா சலசலப்பின்றி, வெகுகாத்திரமான எடுகோளை மையமாய் வைத்து நிகழ்வது எல்லார்க்கும் பெருமை தரக்கூடிய கைங்கரியமாகும். பெண்மை போற்றப்படலாம். இலக்கியங்களில் ஆனால் ஒரு பெண் போற்றப்படுகிறார் இன்று என்றால் தாய்க்குலமே போற்றப்பட்டது என்றுதான் அர்த்தம். பெண்மையின் செயற்றிட்டம் சாதனைப் படுத்தப் பட்டதின் பிரதிபலிப்பே இவ்விழா:

இன்று பாராட்டுக்குரிய பெண்மணி குடும்பப் பெண்களுக் கெல்லாம் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றார். எனவே அன்னாரைக் கௌரவிப்பதால் நான் பெருமையடைகிறேனெக் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து முன்னாள் மாவட்டசபைத் தலைவர் சு. நடராசா அவர்கள் பட்டமளித்து விருது வழங்கிச் சாசனத்தைத் தம்பதிகளிடம் கையளித்து அத் தம்பதிகளின் வாழ்வியலின் சிறப்பை கல்லும் கரைய எடுத்துச் சொல்லி ஓர் அபூர்வமான பெண்தான் திருமதி பவானி மகாதேவன் எனக் குறிப்பிட்டார்கள். பலர் மலர்மாலை சூட்டி அன்பை வெளிப்படுத்தினார்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் பொன்னாடை போர்த்தி பெண்மை வாழ்க, பெண்மை வெல்கவென்று ஆசி வழங்கினார்கள். [சமாதான நீதபதியும் சட்டத்தரணியுமான திரு அ. குமரகுரு அவர்கள் பொற்கிழி வழங்கி அவர்களது சாங்கோ பாங்கமான வாழ்வியலைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுது ஒரு கண்ணிறைந்த காதலன், கண்ணிழந்த கணவன் வடிவில் வந்த போதும் குடும்பத் தலைவனாய் மகாதேவாவை ஏற்று வள்ளுவன் கூறும் வகையில் இல்லறம் காணும் பவானியின் பெற்றி பெரிது என்றார்கள். இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகரவர்கள் தமது ஆசியுரையில் ஒரு சிலர் தமக்காக வாழ்வார்கள். இன்னும் சிலர் பிறருக்காகவே வாழ்வார்கள் -- மேலும் சிலர் தமக்காகவும் பிறருக்காகவும் வாழ்வார்கள். இன்றைய விழாத் தலைவியோ எரியும் மெழுகு வர்த்தி போலத் தன்னை அர்ப்பணித்து ஊதுவர்த்தி போல மணங்கமழ்கிறாரென்றாலவருடைய கற்பென்னும் திண்மைக்குப் புதிய வியாக்கியானங்களை அவராக்கி விட்டாரென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு அவர்கள் மற்றவர்களினின்றும் வேறுபட்ட கோணங்களினின்றெல்லாம் திருமதி பவானி மகாதேவாவின் உதார குணங்களை வெகு நகைச் சுவையோடு எடுத்துக் கூறினார்கள். கண்ணகியை, நளாயினியை, சீதையை இலக்கியங்களிலேதான் சந்திக்க முடிகிறது. அவர்களெப்படி வாழ்ந்தார்களென்பது எழுத்திலேதான் காணலாம். ஆனால் இவரோ எமக்கு மத்தியிலே வாழ்ந்து காட்டிக்கொண்டேயிருக்கும் ஓர் காப்பிய நாயகி என்று குறிப்பிட்டதுடன் தனது கணவனின் கல்லறை காயமுன்னரே வேறு கல்யாணம் காணும் மேலைநாட்டுப் பெண்களைப் போலல்லாமல் வாழ்வில் எதிர்நீச்சல் போடும் சகோதரி பாராட்டுக்குரியவர் என எடுத்துப் பேசினார்கள். தொடர்ந்து திருமதி கோகிலா மகேந்திரனவர்கள் ஒரு ஆணுக்குப் பல்லாற்றாலும் உதவும் திருமதி பவானி மகாதேவன் போல இனிமேல் பெண்ணை, பெண்மையை மனைவியைப் போன்று ஒரு ஆளைத் தெரிந் தெடுத்துக் கௌரவிக்கும் நெறியில் நம்மை வழிப்படுத்த வேண்டும். எதிர்காலத்தினிறை புரட்சியான சிந்தனையை வழங்கினார்கள்.

குறமகள் சமுகமளிக்காமையால் அவருடைய மணிமணியான ஆசிச் செய்தியை கவிஞர் முருக வே. பரமநாதனவர்கள் எடுப்பாக வாசித்தார்கள். ஈற்றில் திரு. பொ. சிவசுப்பிரமணியமவர்கள் ஆசியுரை வழங்கினார். கற்பனையில் காணுமல் யதார்த்தமாக வாழும் வாழ்ந்து கொண்டிருக்கும் இலட்சியக் குடும்பமான மகாதேவன் தம்பதிகளின் வாழ்வு சிறக்க, தொடர எல்லாம் வல்ல இறையருளை வேண்டுவோமாக எனவேண்டினார்

'வாழ்க்கைக் கலை மணி' பவானி அவர்களின் அந்தகக் கணவரான பிரபல சட்டத்தரணி திருகே. வி. மகாதேவனின் மிக உருக்கமான பதிலுரையும் இடம் பெற்றது.

''எனது நல்லாசிரியர்களும் நான் படித்த இனிய இலக்கிய நூல்களும், நண்பர்களும், என் ஆருயிர்க்கண்ணாளனுமே என்னை உருவாக்கியுள்ளனர். நான் பாராட்டப்படுகின்றேன் என்றால், இப் பாராட்டு எனக்குரியதன்று; என்னை ஆளாக்கி வழிப் படுத்தியவர்களுக்கே உரியது'' என திருமதி பவானி மகாதேவன் தனது பதிலுரையில் அடக்கமாகத் தெரிவித்தார்.

நிறைவுரையாக இவ்விலட்சியப் பெருவிழா விழா அமைப்புக் குழு செயலர் திரு. க. சிவானந்தன் அவர்கள் நன்றிப்பெருக்குரை வழங்கினார்கள்;

முருக வே. பரமநாதன்

---

□ சோதிடர் நீங்கள் எனக்கு வாகனப் பொருத்தமில்லையென்று சொன்னீங்களே... அது உண்மை தான்.........

● அப்படியா! ?

□ நான் ஸ்கூட்டர் வாங்கிய பின்பு தான் எரி பொருள் தடை வந்தது.

---

ஒருவர்! போயும் போயும் உனக்கு இயமன் வேஷத்தைக் கொடுத்தாங்களே! இயமன் நடுங்குவானு?

நடிகன்; பனிகாலம்... நடுங்காமல் என்ன செய்யிறது

---

# ஆரோக்கியம் தரும் சிரிப்பு

சிரிப்புக்கோர் சித்திரன் நன்றாகச் சிரியுங்கள். எல்லாவித நோய்களுக்கும் இதுவே சிறந்த ஔஷதம் விஞ்ஞானத்திலும், அறிவியலிலும் மற்றும் நுண்கலைத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் நடாத்தப் பெற்றுவரும் நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவும் இதையே வலியுறுத்துகின்றன. பிரெஞ்சு ஆராச்சி நிபுணரான டாக்டர் பியரிவாச்சே என்பவர் சொல்லுகிறார் ''சிரிப்பினால் உடலுக்கு நலம் நல்கும் உணர்ச்சிகள் உண்டாகின்றன. உடனிகழ் நரம்புமண்டலத்தின் Sympathetic Nervous System) ஊடாகவும் இந்த உணர்ச்சிகள் காரணமாகவும் நரம்புகளிலிருந்து ஒரு வித சக்தி வெளிப்படுகின்றது. இந்தச் சக்தி மானிடஉறுப்புக்களின் இயக்கங்களை மாற்றும் ஆற்றல் வாய்ந்தது;

மனம் விட்டசிரிப்பினால் ஒருவர் தம் உணர்ச்சித் திணறலிலிருந்து விடுபட முடியும். தினம் தினம் ஒரு தடவையாவது நன்றாகச் சிரிக்கப் பழகிக் கொண்டால் நோய்களை மட்டுமன்றி வேண்டாத மற்றும் பல தீங்குகளையும் இது தடுத்து நிறுத்திவிடும். ஒவ்வொரு முறையும் ஒருவர் நன்றாக வாய்விட்டு சிரிக்கும்போது ஏற்படும் நிகழ்ச்சிகளைக் கவனிப்போம், உடம்பு முழுவதும் வியாபித்துள்ள விறைப்பு நீங்குகிறது. பிரதானமாக மார்புப் பிரதேசத்திலும் வயிற்றுப் பகுதியிலும் ஏற்பட்டிருக்கும் தசைநார்களின் விறைப்பு அகலுறுவிடும் அப்போது வெளிப்படும் பெருமூச்சு உள்ளுறுப்புக்களின் விறைப்பையும் அகற்றி விடுகின்றது. மூச்சின் ஆற்றல் மிகைப் படுகின்றது. இதனால் இரத்த நாளங்களில் பாயும் ரத்தத்துடன் பிரணவாயு அதிகளவில் வியாபித்து நிற்கும். பெருமளவு உற்சாகம் உண்டாகின்றது களைப்பு, சோர்வு முதலிய தாக்கங்களிலிருந்துவிச்சாந்தி ஏற்படுகின்றது. குதிக்காலிலிருந்து தொண்டை வரையிலான சகல உறுப்புகளும் உற்சாகம் அடைகின்றன.

''சிரிப்பில் தாக்கத்தை எந்தக்கேடும் எதிர்த்து நிற்கமுடியாது'' என்று மார்கட்வைன் (Mark Twain) என்ற ஆராட்சியாளர் கூறியுள்ளார் ஜீரண சக்தியும் சிரிப்பினால் அதிகரிக்கின்றது.

அதிகமாகச் சிரிப்பவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றார்கள் அதிக ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள். அன்றாடக் கவலைகள் பயம்முதலியவற்றையும் போக்கி விடுகின்றது; எனவே சிரித்திரனைத் தவறாது படியுங்கள் நன்றாகச் சிரிக்கலாம்'

ராஜஹம்ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவை மீட்டல்



எரிபொருள் தட்டுப்பாடு



மெய்மறந்த பேச்சாளர்






அக்கினி புத்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாட்டிற்கு ஒரு புலவன் பாரதி'

பாட்டுப் பதிவுக்கு ஓர் ஸ்தாபனம்

## றேடியோஸ்பதி

நீங்கள் விரும்பிய இசையெல்லாம் எம்மிடம் உண்டு.

பதிவு செய்து தரப்படும்

அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும் ரேடியோ ரேப் றெக்கோடர்கள் தொலைக் காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் திருத்தம் செய்வதிலும் முன்னணியில் திகழ்பவர்கள்.

நல்லூர் விலாசம்

# றேடியோஸ்பதி

766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண விலாசம்

58, கஸ்த்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Phone 23805

தையல் கலைக்கு அழகு தரும் தரமான உரமான நூல்கள்

- ❈ முயல் மார்க் பருத்தி நூல்
- ❈ எவரெஸ்ட் பொலியஸ்டர் நூல்
- ❈ ஸ்பீட் மாஸ்டர் பொலியஸ்டர் நூல்
- ❈ D. A. M. மார்க் எம்ப் ரோய்டரி நூல்:

நீண்டகாலம் உழைக்கவல்ல எமது உறுதியான தயாரிப்புகளை பாவியுங்கள்

## சம்பியன்திரட்

மனுபக்சறிங் கொம்பனி
100, புதிய சோனகத் தெரு,
கொழும்பு--12

# சிரித்திரன்

சந்தாப் பணம்

ஒரு வருடச் சந்தா 56--00
ஆறுமாத சந்தா 28--00

சந்தாப் பணத்தை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ S. சிவஞானசுந்தரம் என்ற பெயருக்கு அனுப்பவும்

அனுப்ப வேண்டிய முகவரி

சிரித்திரன்
550, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு டாக்டரின்
டயறியில் இருந்து

மருதடியான்

# நோயை மாற்றுது நோயாளியை மாய்க்கும் சுயவைத்தியம்

''ஐயோ! என்ரை மனுஷன் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறார்........வழியை விடுங்கோ, டொக்டரிட்டை அவசரமாகக் காட்டவேணும்......''

பெண்ணின் பதற்றமான பெருங் குரல் கேட்டு, வாசற் பக்கம் நான் திரும்பவும், மயக்கமாகக் கிடந்த ஒருவரைத் தூக்கிக் கொண்டு, அவசரமாக அவர்கள் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

பரிசோதனைக் கட்டிலில் அவரைக் கிடத்தினார்கள்.

''என்ன நடந்தது?''

''தலையிடி எண்டு சொன்னவர்; கோப்பி போட்டுக் குடுத்திட்டு, பிணத்தடிக்கு நான் குளிக்கப்போட்டன்...

...திரும்பி வந்து பார்க்கக்குள்ளே, அவர் பேச்சு மூச்சில்லாமல், ஈஸிச் செயரிலை சரிஞ்சு போய்க் கிடந்தார். அதுதான் கொண்டோடி வாறம்......

......எப்படி எண்டாலும் அவரைக் காப்பாற்றிப் போடுங்கோ டொக்டர்'' அவள் தேம்பித் தேம்பி அழுதாள். ''பயப்படாதையுங்கோ; நான் என்னெண்டு பாக்கிறன்''

பார்த்தபோது —

வெண்மையான அவர் உடல் முழுவதும் சிவந்து 'ஆனைத்தடிப்பான்' போல் தடித்துக் கிடந்தது!

உடல் ஐஸ்கட்டி போல் குளிர்ந்து கிடந்தது!

பிரஷர் பார்த்தபோது மிகவும் குறைந்து போய்க் கிடந்தது!

ஆபத்தான நிலை!!

ஏதோ கடுவலான 'அலர்ஜீக் ரியக்ஷ்ன்' எனப் புரிந்தது.

துரிதமாகச் செயற்பட்டேன்.

தசையில் போடும் ஊசி; இரத்தக்குழாயில் நேரடியாகச் செலுத்தும் ஊசி; 'சேலையின் டிரிப்' என அடுக்கடுக்காக ஏற்றினேன்.

சிறிது சிறிதாக அவர் நினைவு திரும்பியது.

அப்பொழுதுதான் அந்த முகமும், அந்த விஷயமும் ஞாபகத்திற்கு வந்தன!

அவருக்கு 'அஸ்பிரின்' குளிசை ஒத்துக் கொள்வதில்லை. அதைப் பாவித்தால் அவருக்கு 'அலர்ஜிக் ரியக்ஷன்' ஏற்படுவதுண்டு. 'அஸ்பிரின்' குளிசையையோ, அல்லது 'அஸ்பிரின்' கலந்த வேறு குளிசைகளையோ எக்காரணம் கொண்டும் பாவிக்கக் கூடாது என அவருக்கு எச்சரிக்கை செய்திருந்தேன். அத்துடன் எங்கு மருந்துக்குச் சென்றாலும் காட்டும்படி, இதுவிஷயமாக மருத்துவ அறிவிப்பு மட்டையும் கொடுத்திருந்தேன். எனவே இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்று ஆச்சரியமாக இருந்தது; விசாரித்தேன்.

''சரியான தலையிடியாக இருந்தது.... 'அஸ்பிரின்' எனக்கு ஒத்துக் கொள்ளாது எண்டு தெரியும்தானே... அதுதான் 'கோடிஸ்' குளிசை வாங்கிப் போட்டனான்......'' என்று முனகலுடன் கூறினார்.

'கோடிஸ்' குளிசையில் 'அஸ்பிரின்' கலந்திருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மருந்துக் கடைக்காரருக்கும் விஷயம் புரியவில்லைப் போலும்.

தனது தலைவலிக்கு, தானாகவே மருந்து சாப்பிட்ட அவரின் தலைக்கு வந்த ஆபத்து, நல்ல வேளையாகத் தலைப்பாகையுடன் போய்விட்டது! ஆனால் அதிர்ஷ்டம் என்றும் அவர் பக்கம் இருக்கும் என்று சொல்ல முடியாது.

தனக்குத் தானே சுய வைத்தியம் செய்ய முற்படும் போது இத்தகைய சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

வைத்திய அறிவை, கேள்வி ஞானத்தால் பெற்றுவிட முடியாது! கடுமையான ஐந்து வருடப் படிப்பும்' பயிற்சியும் பின் ஒரு வருட காலம் ஒய்வேயற்ற தீவிர

'ஹவுஸ் ஒபிசர்' நேரடி ஆஸ்பத்திரிப் பயிற்சியும் பெற்றுங்கூட, இன்றைய டாக்டர்களால் படுவேகமாக முன்னேறி வரும் நவீன மருத்துவத் துறையைப் பூரணமாக அறிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ முடியாதிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராச்சிகளின் பலனாகத் தினசரி புதுப்புது மருந்துகள் பாவனைக்கு வருகின்றன. அதே ஆராச்சிகளின் பலனாக பலமருந்துகள் பாவனைக்கு ஏற்றதல்ல என அடிக்கடி ஒதுக்கப்படுகின்றன புதுப்புது சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் தமது நேரடி அனுபவங்களாலும், மருத்துவக் கூட்டங்களில் கலந்து கொள்வதாலும், மருத்துவச் சஞ்சிகைகளைத் தொடர்ந்து படித்துவருவதனாலும், தமது மருத்துவ அறிவைக் கறள்கட்டி விடாமல், பட்டை தீட்டிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் இன்றைய டாக்டர்கள்.

எனவே எந்தவித வைத்தியமும் கற்காது கேள்வி ஞானத்தை மட்டும் வைத்துக் கொண்டு சுயவைத்தியம் செய்ய முற்படுவது முறையற்றது மாத்திரமின்றி உயிருக்கே ஆபத்தாக முடியலாம்'

இயக்கம் குறைந்தவராக, மிகுந்த சோர்வுடன், மேலெல்லாம் சாம்பல் பூசியது போன்ற அசாதாரண தோற்றத்துடனும் கவலையும், விரக்தியும், நிறைந்த முகத்துடனும் வந்த அவரைப் பார்த்த உடனேயே அவர் ஏதோ கடுமையான உள்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் எனப் புரிந்தது.

''டொக்டர் உடம்பிலை தென்பே இல்லை. அடிக்கடி தடிமன், காய்ச்சல், வயிற்றோட்டம் எண்டு ஏதாவது வருத்தம் வந்து கொண்டேயிருக்கு ..... பசியில்லை உடம்பும் மெலிஞ்சு கொண்டே போகுது...''என்றார்.

'சலரோகமாக இருக்குமோ?!

சலத்தைச் சோதித்துப் பார்த்த போது சலத்தில் சீனிச்சத்து இருக்கவில்லை.

இரத்தப் பரிசோதனையில் அது தெரிய வந்தது!

அவரது இரத்தத்தில் வெண்குருதிக் கலங்கள் மிக மிகக் குறைவாகவே இருந்தன.

மனித உடலில் இரத்தக் கலங்கள் நாளாந்தம் அழிந்து கொண்டே இருக்க, அதேஅளவு புதுக் கலங்கள் நாளாந்தம் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்றன.

இவருக்கு இப்புதிய உற்பத்தி அருகி விட்டதால், இரத்தத்தில் வெண் குருதிக் கலங்களின் அளவு மிகவும் குறைந்து விட்டது.

இதனால் நோயை எதிர்க்கும் சக்தி குறைந்து, அடிக்கடி பல்வேறு நோய்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்.

இதற்கான காரணம் நீண்ட விசாரணையின் பின் பிடிபட்டது!

அவருக்கு முன்பொருமுறை வயிற்றோட்டம் வந்த போது, ஒரு டாக்டர் அவருக்கு 'குளோரம் பெனிக்கோல்' என்ற மருந்தைக் கொடுத்திருந்தார்.

அதில் சுகம் கிடைத்த காரணத்தால், பிறகு வயிற்றோட்டம் வந்த போதெல்லாம், எந்த டாக்டரின் ஆலோசனையுமின்றி, தானாகவே அந்த மருந்தை வாங்கிப் பாவித்து வந்தார்.



மகள்: அம்மா.....தயவு செய்து ரேடியோவை நிற்பாட்டுங்க...நான் படிக்கவேணும்.

தாய்: கிளித்த படிப்பு...போடி...நான் சினிமாப் பாட்டுக் கேட்க வேணும்.

'குளோரம் பெனிக்கோல்' என்ற இந்த மருந்து நெருப்புக் காய்ச்சல், குக்கல், வயிற்றுழைவு போன்ற நோய்களுக்கு பாவிக்கப்படுவதாகும்: குறிப்பிட்ட அளவை மீறாமல், குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் பாவிக்கப்பட வேண்டும். இல்லையேல் ஆபத்தைக் கொண்டு வரலாம்.

வீண் அலைச்சல்களைக் குறைப்பதற்காகவோ, அல்லது மருத்துவச் செலவைக் குறைப்பதற்காகவோ, அல்லது தனது பெருமையைக் காட்டுவதற்காகவோ, செய்த சுயவைத்தியத்தால் தேடிக்கொண்ட நோய்க்கு மாற்று வைத்தியம் செய்ய என்னிடம் வந்த போது, என்னால் உதவ முடியவில்லை.

என்னால் மாத்திரமென்ன, எந்த டாக்டராலுமே குணப்படுத்த முடியாத நோய் இது;

அவர் அணு அணுவாகச் சாக, நாங்கள் எதுவும் செய்ய முடியாமல், கவலையுடன், கையைப் பிசைந்து கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

வைத்தியம் என்பது நோயைச் சரியாகக் கணிப்பது மாத்திரமல்ல! நோய்க்கான மருந்தென்ன? அதை எந்த அளவில் பாவிக்க வேண்டும்? எவ்வளவு காலம் பாவிக்க வேண்டும் அந்த மருந்தினால் ஏதாவது பக்க விளைவுகள் ஏற்படுமா? அப்படி ஏற்படுமேயாயின் அதை ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வது எப்படி? போன்ற பலதரப்பட்ட விஷயங்களைச் சுயவைத்தியம் செய்ய முனையும் சாதாரண மனிதர்களால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்.

பாமர மக்கள் பொதுவாக இப்படியான சுயவைத்தியப் பரிசோதனைகளில் ஈடுபடுவதில்லை. காய்ச்சல் வந்தால் 'பனடோல்' குளிசை பாவிக்கக் கூடப் பயப்படுபவர்கள் அவர்கள்.

மருந்து பாவிப்பதற்கு மாத்திரமின்றி, சாப்பிடுவது குளிப்பது, முழுகுவது, எல்லாமே டாக்டரின் புத்திமதிப்படியே செய்ய வேண்டும் என்று நினைப்பார்கள் சில வேளைகளில் முகம் கழுவுவது சுடுதண்ணீரிலா என்று கேட்பதற்கு நாலு ஐந்து மைல் பிரயாணம் செய்து டாக்டரிடம் வரும் வெகுளித்தனமான பாமரமக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரண துணிச்சலுடன் மூடத் தனமாகச் சுய வைத்தியத்தில் ஈடுபடுவது பொதுவாக ஓரளவு படித்தவர்களே. மருந்துக் கடைக்காரர், ஆஸ்பத்திரி ஊழியர்கள், டாக்டர்களின் உறவினர் ஆகியோரும் சுய வைத்தியத்திற்குப் பெயர் போனவர்கள்.

ஒரு நண்பர் கூறிய கதை ஞாபகத்திற்கு வருகிறது:

சுய வைத்தியம் செய்வதில் பெருமை கொள்ளும் அதைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் விஞ்ஞானப்பட்டதாரி ஒருவர் இருந்தார் அவரது பிள்ளைக்கு அடிக்கடி தலைவலி வருவதுண்டு. 'வசனசயிட்டில்' வருத்தமாக இருக்கலாம் என்றெண்ணி பல காரமான நுண்ணுயிர் கொல்லி மருந்துகளையும், கடுமையான வலி நிவாரணிகளையும் கொடுத்துப் பார்த்தார், எதுவித சுகமுமில்லை; தலையிடி அடிக்கடி வரத்தொடங்கியது'

பயந்து போன அவர், நரம்புத்துறை வைத்திய நிபுணரிடம் சென்றிருக்கிறார். கண்ட கண்ட மருந்துகளைப் பாவிப்பதற்காக அவரைக் கடிந்த வைத்திய நிபுணர், தலையிடிக்கான காரணம் கண்பார்வைக் கோளாறுதான் என்று கூறிகண் வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைத்தார்.

கண் வைத்திய நிபுணர் சிபார்சு செய்த மூக்குக் கண்ணாடியை அணியத் தொடங்கியதும், எந்தவித மருந்துகளுமின்றியே அவரின் பிள்ளையின் தலையிடி மறைந்து விட்டது!

சுயவைத்தியம் என்பது சாதாரண மக்களுக்குத் தான் ஆபத்தானது என்பதில்லை டாக்டர்களும் இதற்கு விதிவிலக்காக முடியாது.

ஒதுக்குப் புறமான காட்டுப் பிரதேசத்தில் தனியே வேலை செய்து வந்த டாக்டர் ஒருவருக்கு திடீரென ஒருநாள் சலப்பையில் கல் அடைசல் என்று சொல்லப்படும் 'ரீனல் கொலிக்' வயிற்றுவலி வந்து விட்டது. வலியால் மிகவும் கஷ்டப்பட்ட அவர், வேறு எந்த டாக்டரையும் கலந்தாலோசிக்க முடியாத சூழ்நிலையில் தனக்குத்தானே 'பெத்திடீன்' என்று ஊசி மருந்தை ஏற்றும்படியாயிற்று சுகம் வந்தது.

இதன்பின் அவருக்கு அடிக்கடி அந்த நோய் ஏற்படத் தொடங்கியது. அடிக்கடி தனக்குத் தானே ஊசி ஏற்றிக் கொண்டார். உண்மையில் அடிக்கடி வலிஏற்பட்டதா, அல்லது வலிஏற்பட்டதாகப் பாவனை செய்தாரா தெரியாது; ஏனெனில் 'பெத்திடீன்' என்ற அந்த மருந்து சிறந்த வலி நிவாரணி மாத்திரமின்றி ஓரளவு போதையையும் கொடுக்கக் கூடியது.

ஆஸ்பத்திரியில் இருந்த 'பெத்திடீன்' ஊசிக்குப்பிகள் மாயமாக மறையத் தொடங்கின! அவரால் கணக்குக்காட்ட முடியவில்லை!!

பிறகு ஆஸ்பத்திரிப் பணமும் காரணமின்றிக் கரையத் தொடங்கியது! ஊசி மருந்து வெளியே வாங்குவதற்காக!!

விசாரணையின் பின் வேலையை இழந்தார்,

போதை ஊசிக்கு அடிமையான அவரால் இன்றும் அதிலிருந்து விடுபட முடியவில்லை.

தன்னை அறியாத புது டாக்டர்களைக் கண்டு விட்டால் ஏதாவது சாக்குப் போக்குக் கூறி ஒரு 'பெத்திடீன்' ஊசி ஏற்றுவித்துக் கொள்வார்! தன்னைப் பற்றி அறிந்த டாக்டர்களைக் கண்டால் ஏதாவது பொய் சாட்டுச் சொல்லிச் சிறிதுபணம் தேற்றி கொண்டு ஊசி மருந்து வாங்குவதற்காக மருந்துக் கடைக்கு ஓடுவார்

அவரை அறிந்த டாக்டர்களும், மற்றவர்களும் அவரின் தலையைக் கண்டாலே ஓடி ஒளிந்துகொள்ளும் அளவிற்கு இழி நிலைக்கு வந்து விட்டார்.

மக்கள் மத்தியில் பெருமையுடனும், புகழுடனும் வாழவேண்டிய டாக்டர் இன்று பிச்சைக்காரனைப்போல் போதை ஊசிக்காக இரந்து திரிய வேண்டி வந்ததற்கு காரணம் இந்தச் சுயவைத்தியம்தானே?

சுயவைத்தியம் ஜீவநாசினி.

## "அச்சகத்துப் பேய்"

ஆங்கில மரபுச் சொற்றொடர்களை அப்படியே சொல்லுக்குச் சொல்லாக மொழி பெயர்த்தால் சில சமயங்களிலே பேயறைந்தது போலத்தான் விழிக்க வேண்டி வரும் (Printers Devil) என்ற சொற்றொடரைத்தான் மொழிபெயர்த்து இங்கே தலையங்கமாகத் தந்திருக்கிறேன்.

''தம்பி நீரும் கொஞ்சம் இலக்கணம் தெரிந்திருப்பது நல்லது'' என்று அச்சுக் கோர்ப்பவர்களுக்குச் சொல்லுவாராம் நாவலர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களைத்தான் சொல்லுகிறேன். சைவத்துக்கும் தமிழுக்கும் அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளிலே மிகவும் சிறந்தது அவருடைய நூற்பதிப்புகளே யாகும்.

அவர் தாமாகவே எழுதிப் பதிப்பித்தவை ஒருபுறமிருக்க பழந்தமிழ் நூல்களான திருக்குறள் தந்த புராணம் திருச்சிற்றம்பலக் கோவையார் நன்னூல் காண்டிகையுரை முதலியவற்றைப் பலபிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பித்தவைதாம் நமக்குப் பெரிதும் பயன்படுவனவாகும். எழுத்துப் பிழை இலக்கணப்பிழை என்பன அந்நூல்களிலே மருந்துக்குக்கூட கிடையாது. பிழைதிருத்தம் என்ற பக்கம் இல்லாத நூல்கள் அவருடைய பதிப்புகள். ஆனால் பிழை திருத்தம் என்ற பக்கம் இல்லாமல் இப்பொழுதெல்லாம் பல நூல்கள் வெளிவருகின்றனவே என்று யாரோ சொல்வதும் காதில் விழுகிறது

இப்பொழுது வெளிவரும் நூல்களுக்குப் பிழைதிருத்தம் என்ற பகுதி சேர்க்கப்பட வேண்டுமானால் சில சமயம் நூலில் பாதியாவது அதற்கென்று ஒதுக்க வேண்டி வந்துவிடுமே என்ற அச்சம் காரணமாகஅப்படி ஒரு பகுதியைச் சேர்க்காமல் விடுவதும் உண்மைதான்.

நாவலர் காலத்தில் அவருடைய மேற்பார்வையிலே சென்னை வித்தியானுபாலன யந்திரசாலையிலே நூல்கள் அச்சாகும்போது அவரே அச்சுக் கோர்ப்பவர்களுக்குப் பின்னால் நின்று அவ்வப்போது தவறுகளைச் சுட்டிக் காட்டிச் சரிசெய்வித்து விடுவாராம். அத்தகை சந்தர்ப்பங்களிலே தான் மேற்சொல்லிய அறிவுரையை அவர் வழங்குவதுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

எழுத்துப் பிழை இலக்கணப் பிழை மாத்திரமன்றி அவருடைய பதிப்புக்களிலே, சிறப்பாக வசன நூல்களிலே, ஆங்கிலநூல் வழக்கப்படி குறியீடுகள் மிக மிக நுணுக்கமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். நாவலரை நம் தமிழ் வசன நடைக்கும் தந்தை என்பார்கள்.

வை. ஏரம்பமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆச்சி......ஷெல்லடிக்கிருங்கள்......ஓடு.
- எடமேனை......நீ எனக்கொரு நாய்க்குட்டி தாறனென்டாய்......அது எங்கே?

## ஆஸ்த்தி நேர்த்தியில் பிறந்த நேரு

மனைவியுடன் ராமேஸ்வரம் யாத்திரை வந்த மோதிலால் நேரு வழியில் திருவாரூர் தரிசனமும் செய்தார்கள். அத்திருக் கோவிலுக்கு 60 பவுண் கொடுத்து தனக்கு ஒரு ஆண் குழந்தை வரம் வேண்டுமென வேண்டினார். ராமேஸ்வர யாத்திரை முடிந்து ஊர் திரும்பியதும் ஓர் ஆண்மகவு பிறந்தது. அந்த நேரு மாமனிதனாக வாழ்ந்த ஜவஹர்லால் நேரு.

## புகைச் சுருட்டு

— பாரதிதாசன்

புகைச் சுருட்டால் இளமை பறிபோகும்
பொல்லாங் குண்டாகும்
புகைச் சுருட்டால்!

முகமும் உதடும் கரிந்து போகும்
முறுக்கு மீசையும் எரிந்து எரிந்து போகும்
புகைச் சுருட்டால்!

மூச்சுக் கருவிகள் முற்றும் நோய் ஏறும் - பின்னை
முத்தம்தருநே ரத்தில் வாய் நாறும்
ஓய்ச்சல் ஒளிவில் லாதிருமல் சீறும் - நல்
ஊரோ உன்னைச் சீ என்றே கூறும்
பேச்சுக்கிடையில் பிடிக்கச் சொல்லும்
பெரியார் நெஞ்சை அடிக்கச் சொல்லும்
புகைச் சுருட்டால்!

காசுபணத்தால் இத்தீயபலை வாங்கிப் - பின்
கைவிட எண்ணியும் முடியாமல் ஏங்கி
ஏசிக்கொண்டே [illegible]யில் தாங்கி - நீ
எரிமலை ஆகா திரு[illegible] நீங்கி
மாசில்லாத செந்தமிழ் நாடு
வறுமை நோய்பெறல் ஏன் இக்கேடு?
புகைச் சுருட்டால்!


அதி உன்னத சக்தி உணவு

## ஜீவாகாரம்

- வளர்ந்து வரும் குழந்தைகட்கும்
- கர்ப்பத் தாய்மார்களுக்கும்
- பாலூட்டும் தாய்மார்களுக்கும்

ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

அண்ணா டொபிகள்
அண்ணா கோப்பி
அண்ணா பத்திகள்
அண்ணா பற்பொடி

இதே போன்ற அதி உன்னதமான அண்ணா தயாரிப்புகளை நாடுங்கள்

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கள்

சிறுகதை

சுதாராஜ்

பப்பு அம்மாவின் சேலைத் தலைப்பைப் பிடித்தவாறு பிறகால் நடந்தான். அரையிலிருந்து நழுவிவிழும் களிசானை இழுத்து...... இழுத்துப் பிடித்தான் நடந்து கொண்டே சிணுங்கிச் சிணுங்கி அழுதான். அழுகைச் சத்தம் அம்மாவுக்குக் கேட்கவில்லையோ என நினைத்து இடையிடையே சுருதியைக் கூட்டி அழுதுகாட்டினான்.

அம்மா பேசாமல் விறு .....விறு என நடந்தாள். அவளது தலையில் ஒரு பெட்டி இருந்தது ஒரு கை பெட்டியைப் பிடித்திருந்தது மறுகையை அடிக்கடி பின்னே அசைத்து, பப்புவை தன்னோடு சுறுக்காக வருமாறு அழைத்துக் கொண்டே சென்றாள்.

பப்புவுக்குச் சுறுக்காக நடக்க முடியவில்லை. கால்கள் பெலமில்லாதவைபோலிருந்தன. அம்மாவின் நடையைப் பிடிப்பதற்காக இடையிடையே மெல்ல ஓடினான் ஓடிய பொழுது முழங்கால்களுக்குக் கீழ் தழும்பியது. சிணுக்கமெடுத்து அழுதான்; இன்றைக்கு அழுது..... அடம்பிடித்தென்றாலும் சோறு சாப்பிட வேண்டுமென்று பப்பு தீர்மானித்து விட்டான்.

சோற்றைக் கண்டு ரொம்ப நாளாகிறது. பத்து நாட்களுக்கு மேலிருக்கும். தினமும் அவனுக்குச் சோறு சாப்பிட வேண்டும் போலிருக்கிறது. அந்திக்கு வந்து சோறு ஆக்கித் தரலாம்...என்றுதான் அம்மா எப்போதும் சொல்லுவாள் ஆனால், அம்மாவிற்கு சோலி முடிந்து வர இருட்டிவிடும், அப்புறம் சோறு கிடையாது சோறு ஆக்க அரிசி இல்லை என்று சொல்லுவாள் அரிசி வாங்க சல்லி போதாது சோற்றுக்குக் கறி ஆக்கணும் . உப்பு, புளி, கொச்சிக்காய்த்தூள் ...இவற்றுகெல்லாம் கையிலுள்ளதை செலவு செய்தால் மறுநாள் வியாபாரத்துக்கு முதல் கிடையாது. வியாபாரம் முடிந்து வரும் பொழுது அம்மா பாண் வேண்டி வருவாள் பப்புவிற்கு ஒரு துண்டு...அவளுக்கு ஒரு துண்டு. அவளுக்கு பிளேய்ன் டீ! சரியாக வயிறு நிறையாமலே தூக்கத்துக்குப் போவான், அப்புறம்..... தூக்கத்தில் பசிக்கும் சோறு சாப்பிடுவதுபோல கனவு வரும் உளத்தி......உளத்திப் படுப்பான். பசி, விடியப் புறமாகவே எழுப்பி விடும். சிணுங்கத் தொடங்குவான் அம்மா தன்னோடு கூட்டிப் போய் பாணோ பணிசோ வேண்டிக் கொடுப்பாள். தினமும் இதே கதைதான்....,வயிறு நிரம்பாமல் அழுகிறது.

...பசிக்கும் போது சோறு சாப்பிட்டால் எவ்வளவு சோக்காக இருக்கும்! மெத்தென அவிந்த சோற்றை அள்ளி வாயில் வைக்கும் பொழுதே பசி ஆறுவது போலிருக்கும், விருப்பமான கறியோடு குழைத்துச் சாப்பிட்டால் நல்ல ருசியாக இருக்கும் பால்சொதியையும் ஊற்றிப் பிசைந்து அள்ளிவாயில் போட்டு விரல்களைச் சூப்பிச் சூப்பிச் சாப்பிடலாம்.

ஆனால்...இப்பொழுது பாண்கிடைத்தாலும் பப்பு சாப்பிடுவதற்குத் தயாராகத்தான் இருந்தான் என்ன கிடைத்தாலும் சரி அரைவயிற்றை நிரப்பி விட்டாலும் போதும்.

அம்மா நடந்து சந்தியை அண்மித்தாள் இரண்டு வீதிகள் புள்ளடிபோலக் குறுக்கிட்டுச் செல்லும் சந்தி வீதிகளிரண்டும் பல நகரங்களைத் தொடுப்பதால்...... இது வாகனப் போக்குவரத்துக்கள். சன நடமாட்டம் அதிகமான இடம் புள்ளடியின் ஒரு விரிகோணப்பகுதியில் பஸ் நிலையமும் எதிர்த்தாற் போல் மரக்கறிச் சந்தை...மீன்சந்தை ஆகியனவும் அமைந்திருக்கின்றன வீதியின் மற்ற மருங்குகள் மூலை முடக்குகளெல்லாம். கடைகள்...சேலைக்கடை, புத்தகக்கடை, தேனீர்க்கடை! சாப்பாட்டுக்கடை, பலசரக்குக்கடை ..இப்படி எல்லா விதமான கடைகளுடனும் அவள் தலையில் சுமந்து வந்த பெட்டிக் கடையும் போட்டி போடுகிறது.

பஸ் நிலையத்துக்கு அண்மையாக பெட்டியை இறக்கி வைத்தாள். சப்புப் பலகையில் செய்யப்பட்ட சதுரப் பெட்டி நாலு மூலைகளிலும் நீட்டிக் கொண்டிருந்த ஓரடி நீளமான கால்களில் இப்போது ஒரு குட்டி மேஜையைபோல பெட்டி நின்றது. பெட்டியின் மூடியைத் திறந்து வெற்றிலைச் சுருள்களையும் ஒரு சட்டியுடன் கச்சான் கடலையையும் வெளியே எடுத்தாள், வெற்றிலைச் சுருள்களை பெட்டியின் மேல் செய்யப்பட்டுள்ள இடுக்குகளில் அடுக்கிவிட்டு...கடலையை ஐம்பது சதம், ஒரு ரூபாய்க்குரிய கடதாசிச் சுருள்களில் நிறைத்து வைத்தாள். பின்னர் சிணுங்கிக் கொண்டிருக்கும் பப்புவைத் திரும்பிப் பார்த்தாள்.

பப்புவின் முகம், கழுவாத மூஞ்சியாட்டம் வாடிப் போயிருந்தது. உயிரியக்கம் இல்லாதவன்போல அனுங்கினான். அவனது கை களிசானைப் பிடித்துக் கொண்டிருந்தது நல்ல அளவாகத் தைக்கப்பட்ட களிசான் 'பெரிசாகிய' ரகசியம் அவள் அறியாததல்ல இழுத்து அணைத்து அவன் முதுகைத் தடவினாள்;

''இண்ணைக்கு .........எப்படியாச்சும் .........சோறு திங்கலாம்!''

அவன் பறித்து விலகினான்;

''போ!...நீ...பொய்யி!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பு அடம் பிடிப்பதைக் கனிவோடு பார்த்தாள் இரக்கத்தை சிரிப்பாக வெளிக்காட்டினுள். திரும்பவும் இழுத்து அணைத்தாள்;

பப்பு அம்மாவின் முதுகிலே சாய்ந்து கொண்டு மறுபக்கமாகத் திரும்பி இருந்தான். இரவு நுளம்பு கடித்துச் சொறிந்ததினுல் ஏற்பட்ட நகக் காயங்களில் இலையான் மொய்த்தது. இலையான்களை அடித்தவாறு கடிபட்ட இடங்களைச் சொறிந்தான். ரத்தம் கசியச் சிணுங்கினுன்.

அம்மா வழியைப் பார்த்தாள். ஒரு வழியுமில்லை ஏதாவது வியாபாரம் நடந்தால் தான் பப்புவிக்கு பாண் என்ருலும் வேண்டிக் கொடுக்கலாம். காலையில் கடலை விற்பனையாகாது. பத்துப் பதினுெரு மணியாக வேண்டும். சந்தை நாட்களில் காலையில் வெற்றிலை விற்பனையாகும். இன்று சந்தை கூடாதநாள்......சனப்பிளக்கம் இன்னும் இல்லை...என்ன செய்யலாம்?

மாணிக்கம் தனது காரைக் கொண்டு வந்து வழக்கமாக விடும் இடத்தில் நிறுத்திவிட்டு இறங்கினுன் சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு டிக்கியைத் திறந்து வாளியை வெளியே எடுத்தான். கிணற்றடிக்குப் போய் தண்ணீர் கொண்டு வந்து காரைக் கழுவத் தொடங்கினுன்.

அவனிடம் கேட்டுப் பார்க்கலாமா?

இடைசுகம் அவசரத்துக்கு அவள் மாணிக்கத்திடம் கைமாறியிருக்கிருள். அப்படி ஒன்றிரண்டு என வேண்டி பத்துப் பதினைந்துக்கு மேலாகி விட்ட கடனையே இன்னும் திருப்பியபாடில்லை. மேலும் மேலும் எப்படிக் கேட்பது எனத் துணுக்குற்றவாறு இருந்துவிட்டு...... எழுந்தாள். பப்புவும் எழுந்து அம்மாவுடன் போனுன்

''மாணிக்கத் தம்பி...!

......சல்லி...ரெண்டு ரூபா கொடுக்கேலுமா?...... ......அந்திக்குத் திருப்பிடுவன்!''

மாணிக்சம் கார் கழுவுவதை விட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்துச் சிரித்தான்;

''என்னணை...பகிடி விடுகிறியே?...''

''இல்லத் தம்பி!...பப்பு பசியில... அழருன்... ஒரு வழியும் தோணலை...''

''ஆச்சி!......நானும் உன்னை மாதிரிதானணை...,நீ அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து வைச்சிட்டு நிக்கிறமாதிரித்தான்... நான் இந்தக் காரைக் கொண்டு வந்து விட்டிட்டு நிக்கிறன்...... இனி ஏதாவது சவாரி கொத்தினுல்தான்... என்ர கையிலையும் காசு பிளங்கும் நீ நம்பிறியோ தெரியாது....,கையிலை......ஒரு சேமும் இல்லை... காலமை பிள்ளையளின்ரை பாடு என்னவோ தெரியாது...நான் விட்டிட்டு வந்திட்டன்''

''இல்லைத் தம்பி......எனக்குத் தெரியாமலா?...... என்ன செய்ய ...... கடவுள் நம்மளை வருத்தனும்னு நெனைக்கிருர்......''



☐ உன் சிநேகிதி கண் ஒப்பரேசன் செய்து ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிருளாமே! போய்ப் பாக்கவில்லையா?

● இப்போ நான் போய்ப் பார்த்தால் நான் புதுக்கச் செய்வித்துப் போட்டிருக்கும் நகைகள் அவள் கண்ணிற்குத் தெரியாது...... சுகப்படட்டும் போய்ப்பார்ப்பதற்கு.

பப்பு ஏமாற்றத்துடன் அம்மாவைப் பார்த்தான் அம்மாவின் கண்கள் கலங்கியிருப்பது போற் தெரிந்தது அம்மா அதைக் காட்டிக் கொள்ளாமல் மறுபக்கம் திரும்பினுள். பப்பு எட்டி அம்மாவின் முகத்தைப் பார்த்தான் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டிட்டு விழுந்தது

அந்தக் கணத்தில் பப்புவுக்கும் நிஜமான அழுகை நெஞ்சிலிருந்து பொத்துக் கொண்டு வந்தது. ஆனுல் அழவில்லை, நெஞ்சிலிருந்து கிளர்ந்து வந்த குமுறலை அடக்கினுன்;

''உன்ரை அப்பன் இருந்தார்ணு...இந்தக்கொடுமையில்லா ..'' என அம்மா அவனது கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். அப்பொழுது குபுக்கென கண்ணீர் வழிந்து அம்மாவின் கையை நனைத்தது.

''என்ன அழறியா?''

அவன் பதில் பேசவில்லை அப்பாவின் நினைவு பப்புவின் நெஞ்சை வந்து அடைத்துக் கொண்டது. அண்ணன்மார் நினைவில் வந்தார்கள்......

''பப்பு...! பப்பநாதா!....''என அப்பா செல்லம் பொழிய அழைப்பது இப்போதும் காதுகளில் ஒலிக்கிறது. வயல் வேலை ஒழிந்து ராவில் வீட்டுக்கு வரும் பொழுதுகளில் அவர் அவனையே அழைத்துக் கொண்டு வருவார். அவர் நடந்து வருவது கண்களுக்குள் தெரிகிறது. ஆனுல் அவர் இனி அப்படி நிஜமாக வரமாட்டார்.

அப்பொழுது பாவற் குளம் எனும் கிராமத்தில் அவர்கள் இருந்தார்கள். அப்பாவும் அம்மாவும் அண்ணன்மார் இருவரும் அங்கு ஒரு வயலில் வேலை செய்தார்கள் குடிசையும் அங்கையே இருந்தது. மூனுவருடங்களுக்கு முன்னரென...பப்புவுக்கு நினைவிருக்கிறது; அவ்விடத்தைச் சுற்றிவளைத்த ஆமிக்காரர்கள் அண்ணன்மார் இருவரையும்...மற்ற இளைஞர்களோடு சேர்த்துக் கொண்டு போனுர்கள். அந்த இடியிலிருந்து மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலே...;அடுத்த இடி......ஆறோ ஏழு மாதங்களுக்கு முன்னர்... வயலில் வேலைசெய்து கொண்டிருந்த அப்பாவையும் சுட்டுப் போட்டார்கள். அம்மா பப்புவையும் இழுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடினாள். இரவோடு இரவாக... காடுகளுக் கூடாக ஓடி, பிரதான வீதிக்கு வந்து, காலையில் அவ்வீதியால் வந்த லொறிக்காரரிடம் கையெடுத்துக் கும்பிட்டு......கிளிநொச்சி வந்து சேர்ந்தார்கள்.

அகதிகள் முகாம்! சில நாட்களிலேயே சாப்பாட்டுச் சாமான்களுக்காக அகதிகளுக்குக் கொடுத்த கூப்பன்துண்டை அரசாங்கம் நிறுத்தி......பழைய இடங்களுக்குப் போகும்படி சொன்னது. ஆனால்.......உயிர் போனாலும் இனி அந்தப்பக்கம் போறதில்லை... எனத் அம்மா அவனை யாழ்ப்பாணப்பக்கம் கூட்டிவந்தாள், தொடர்ந்தும் அகதிகள் முகாமில் இருப்பதைவிட, நிரந்தரமாக ஏதாவது வழிபார்க்க வேண்டுமென ஒவ்வொரு வீடாக அம்மா ஏறி இறங்கினாள்; ஏதாவது வேலை தேடலாம்: அவ்வப்போதைக்கு சாப்பிட ஏதாவது கிடைக்கும்; ஆனால் வேலை கிடைக்கவில்லை. இப்படியே வாழ்க்கை பூராவும் சீவிக்கேலுமா ....... .. என அம்மா, சவர்க்காரப் பெட்டியில் மேசை செய்து. வெற்றிலை .....கடலை வியாபாரத்தை ஆரம்பித்தாள்— சொந்தக் கால்கள்

''என்ரை ..குஞ்சை...எப்படியாச்சும்... காப்பாத்துவன்'' — அம்மா அடிக்கடி இப்படிச் சொல்லுவாள் அது......இவனுக்கு ஒரு வித தைரியத்தை.... பயம் மறந்து ஆறுதலை ஏற்படுத்துவதை பப்பு நினைத்துப் பார்த்தான். நல்ல காலம்....அன்றைக்கு அம்மா வயலுக்குப் போகவில்லை போயிருந்தால் கால்களைப்போல இன்று தன்னைச் சுமந்து கொண்டிருக்கும் அம்மாவையும் இழந்திருப்ப ன்.

அம்மா இரண்டு கடலைச் சுருள்களை எடுத்து பப்புவிடம் கொடுத்தாள்' அதைக் கையிலெடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான்.

''கடல .....டெல......

காலை இயங்கத் தொடங்கி விட்டது. மக்கள் தங்கள் அன்றாடக் கடமைகளுக்கு ஆயத்தமாகி விட்டார்கள். ரோட்டில் ஆட்கள் நடமாட்டம் அதிகரித்தது. சைக்கிள்கள் இங்குமங்குமாகப் பறந்தன. பெற்ரோல் விற்பவர்கள் வீதியோரத்தில் மேசையை வைத்து போத்தல்களில் பெற்ரோலை நிரப்பி அடுக்கினார்கள்...'' கார்கள் ஓடத் தொடங்கின.

''கடல......கடல......

...பஸ்ஸிற்காக வந்து காத்து நிற்கும் பயணிகள்... வேலைக்குப் போகும் உத்தியோகத்தர்கள், பாடசாலைப் பிள்ளைகள்!

பப்புவின் கண்கள் அசையாது நிலைத்தன. அவ்விடத்திலேயே நின்றான், பாடசாலைப் பிள்ளைகளின் பளிச்செனும் உடைகள்! அழகாக அடுக்கப்பட்ட புத்தகங்கள்......புத்தகப்பைகள்! நல்ல கறுப்பு, வெள்ளை சப்பாத்துக்கள்'



கடலைக்காரி; எடிமேனை, அந்தக் கல்குலேட்டரை எடுத்துக் கடலைப் பெட்டிக்குள்ளை வை......கடலை வியாபாரத்திக்கு போக வேண்டும்.

— நவம் —

ஸ்கூலுக்கு போன நாட்கள் பப்புவுக்கு நினைவில் வந்தன. அப்பொழுது அவனது கால்களுக்கு ஒரு செருப்புத்தன்னும் இருக்கவில்லை. தொலைவிலுள்ள பாடசாலைக்கு ஏனைய சிறுவர்களுடன் காட்டுப் பாதைகளூடு நடந்து செல்வான். அவர்களை ஏற்றிச் செல்ல பஸ் வராது திரும்ப வரும்பொழுது நடுவெய்யில்... ரோட்டுச்சூடு உள்ளங் கால்களில் அள்ளும் ரோட்டு ஓரமாக உள்ள புற்களின்மேல் கால்களை வைத்து நிற்பான்; எரிவு ஆறியதும் நடப்பான்; அப்பொழுதெல்லாம் இப்படி, அவனுக்கும் சப்பாத்து இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!

ஆனாலும் அது, பரவாயில்லைப்போலிருந்தது பப்புவுக்கு அப்போ, சாப்பாட்டுப் பிரச்சனை என ஒன்றிருக்கிறது என்றே தெரிந்திருக்கவில்லை. காலையில் எழுந்தால் சாப்பாடு கிடைத்தது. ஸ்கூலுக்குப் போய் வந்தால் சாப்பாடு கிடைத்தது, விளையாடித் திரிந்துவிட்டு வந்தால் சாப்பாடு கிடைத்தது

பள்ளிப் பிள்ளைகள் பப்புவைப் பார்த்துச் சிரித்தார்கள். அவன் குனிந்து பார்த்துவிட்டு, களிசானை இழுத்துப் பிடித்துக் கொண்டு அப்பால் நடந்தான்;

''கடல......கடல......''

பஸ் நிலையத்திலிருந்து இறங்கி கார்கள் விடப்பட்டிருக்கும் பக்கமாக நடந்தான். மாணிக்கம் மறுபடியும் தனது காரைத் துடைத்துக் கொண்டு நின்றான்; பழனி பக்கத்தில் நின்றான். முருகேசுவும் கிளியும் தங்கள் கார்களுக்குள் படுத்திருந்தார்கள். நாலு கார்களும் வரிசையாக அடுக்கிவிடப்பட்டிருந்தன. ஹயரிங் கிடைக்கும் பொழுது போய்விட்டு வந்து அதேமாதிரி காரை பார்க் பண்ணுவார்கள். ஒரு முறை ஓடினாலே நிறையக்காசு கிடைக்கும் போலிருக்கிறது. இப்படிக் கடலை விற்றுக் கொண்டு திரியத் தேவையில்லை. பழனியைப் பார்த்தால் மூத்த அண்ணனைப் பார்க்குமாப் போலிருக்கு அண்ணன் இருந்தால் இப்போ சிலசமயம் கார் ஓடப் பழகியிருப்பான். ஒரு ட்றைவராகியிருப்பான். தனக்கு ஒரு தொல்லையுமிருக்காது...' வளர்ந்த பிறகு தானும் ஒரு கார் வேண்டவேண்டுமென பப்பு நினைந்தான் அம்மாவுக்குக்கஷ்டமிருக்காது, இவர்களைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கலாம் அம்மா ஆக்கித்தருவாள். நிரம்பச் சாப்பிடலாம், ஆனால் வளர்வதற்கு இன்னும் எவ்வளவு காலங்கள் ஆகுமோ......!

பப்புவிற்கு அலுப்படித்தது. கடலைச் சுருள்களைக் கொண்டு வந்து பெட்டியின் மேற்போட்டு விட்டு அம்மாவின் பக்கத்தில் சுருண்டு படுத்தான். அவனை உறக்கம் தழுவிக்கொண்டது.

''பப்பு!...பப்பநாதா!...ஹ்'' அம்மா அவனை எழுப்பினள்; ''எந்திரு!''

பப்பு எழுந்து சோம்பல் முறித்தான்.

''இந்தா!... போய்...பாணு வாங்கிக்கினுவா,...''

மறுகதை பேசாமல் அம்மா கொடுத்த காசை வேண்டிக் கொண்டு நடந்தான்.

சாப்பாட்டுக் கடைக்குள் பப்பு நுழைந்த பொழுது உள்ளே ஆட்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. அவனது கால்கள் சற்றும் தாமதியாது விறுக்கென உள்ளே சென்றன

மேசையின் முன் மூன்று நான்கு பேர்களாக இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் முன்னுல் வாழை இலையில் போடப்பட்டிருக்கும் சோற்றை, தங்களுடைய பெரிய கைகளால் குழைத்து...... நல்ல பிடிபிடித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் என்ன செய்கிறுர்கள் என்று நிமிர்ந்து கிமிர்ந்து பார்க்காமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு தள்ளினுர்கள். வாளியில் சாம்பாற்றைக் கொண்டு வந்து கரண்டியால் துளாவி ஊற்றியதும் இலையை வளைத்துப் பிடித்துச் சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டார்கள்.

''டேய்!......இந்தப் பொடியன் உதிலை......நிண்டு என்ன செய்யிறுன்?'' காசு மேசையிலிருப்பவர் உள்ளே குரல் கொடுத்தார் உள்ளேயிருந்து ஒருவன் வந்து...., பப்புவை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கொண்டு போனுன்.

''பாணு!...பாணு!'' பப்பு அவனை நிமிர்ந்து பார்த்து காசை நீட்டினுன். வெளியே தள்ளிவிட்டுப்போக திரும்பவும் வந்து மேசையில் காசை வைத்தான். சாப்பிட்டபின்னர் உள்ளேயிருந்து காசு மேசைக்கு வந்தவர்களின் வண்டி (வயிறு) அவனது தலையில் முட்டியது. திரும்பிப் பார்த்தான் பப்பு...., 'சிலரின் வண்டியைத் தூக்க இன்னெரு ஆள் தேவைப்படும் போலிருக்கு!'

பிளேப்பன் டையயும் பாணையும் எடுதுக் கொண்டு அம்மாவிடம் நடந்தான். இரண்டாகப் பிய்த்து ஒரு துண்டை அம்மாவிடம் கொடுத்தான்.

சாப்பாடு ஆகியதும் கடலைச் சுருள்களை எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினுன்.

''கடல......கடல......''



☐ இப்ப கள்ளுக் கோப்பிரேஷனிலும் ஆஸ்பத்திரி மாதிரி நம்பர் எடுத்துத் தான் கள்ளுக் குடிக்க வேணும்.

● ஓ....அங்கையும் கலவைதானே ஊத்துகினம்

— அதிமதுரம் —

கால்கள் போன போக்கில் நடந்தன. நிறையச் சனங்கள் அங்குமிங்குமாக நடந்து திரிந்தார்கள் பப்புவுக்கு ஒருவரையுமே தெரியவில்லை...... நல்ல உன்னிப்பாக ஒவ்வொரு முகங்களையும் பார்த்தான்; தான் தனியாக விடப்பட்டதைப் போல கவலை மேலிட்டது' தனது அக்கம் பக்கத்துச் சனங்கள்...சிநேகிதச் சிறுவர்களையெல்லாம் நினைத்துப் பார்த்தான். அவர்கள் இப்போ எங்கேயோ தெரியாது. விம்மல் பொங்கிப் பொங்கி வந்து நெஞ்சுக்குள்ளேயே அடங்கிக் கொண்டிருந்தது. இடம் வலம் தெரியாத இடத்தில் தான் நடப்பதைப் போல உணர்ந்தான்;

கார்களுக்கு அண்மையாக வந்த பொழுது கார் வேண்டுவதாக எண்ணியது நினைவில் வந்தது. கிட்டச் சென்று ஒவ்வொரு கார்களாகப் பார்த்தான். பெரிய முழிகளைப் போன்று அவற்றின் முகங்களிலிருக்கும் லைட்டுக்களைத் தடவினுன். மாணிக்கத்தின் கார் மற்றவற்றை விடப் பழசாக இருந்தது. பல இடங்களில் பெயின்ற் பொருக்கு வெடித்தது போல கொட்டுண்டிருக்கிறது. மெல்லிய தோலைப் போல உரிந்திருக்கும் பெயின்ற்றுக்களை நகத்தைக் கொடுத்துப் பிய்த்தான்.

டே, டேய், ..போ! ப்பா!'' என மாணிக்கம் பப்புவைப் பார்த்துச் சீறினுன்; பப்பு போகாமல் நின்றுன்...பெரிய திறம்கார்...உக்கல்!''

அப்பொழுது மாணிக்கத்தின் மகன் போலிருக்கிறது வீட்டிலிருந்து வந்தான்;

''அம்மா காசு வேண்டியரட்டாம்'' என மாணிக்கத்திடம் கேட்டான். மாணிக்கம் மற்ற ட்றைவர்களிடம் கேட்டுப் பார்த்தான் கிடைக்கவில்லை.

''ராவைக்குக் கொண்டு வாறன்......போ!'' என மகனிடம் சொன்னுன் மாணிக்கம்.

பப்புவுக்கு மாணிக்கத்தைப் பார்க்கக் கவலையாக இருந்தது. மாணிக்கத்திடம் காசு இல்லைப்போலிருக்கு 'ஏதாவது சவாரி கொத்தினுல் தான் கையில் காசு பிளங்கும்' என மாணிக்கம் காலையில் சொன்னது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது நினைவில் வந்தது. அட, அது உண்மைதான். காசு இல்லாதபடியால் தான் அவனது கார்கூட உக்கலாக இருக்கிறது. இன்று முழுக்க கார் அவ் விடத்திலேயே நிற்கிறது. தான் தூக்கமாக இருந்த பொழுது ஒருவேளை போயிருக்க மாட்டானோ என்று தோன்றியது. இருக்காது...கார் ஓடியிருந்தால் அவனிடம் காசு இருந்திருக்கும் அப்படியென்றால்...... மாணிக்கம் சாப்பிட்டதோ தெரியாது. மூன்று நாலு மணியாகிறது. காலையிலும் சாப்பிடாமல் எப்படி இவ்வளவு நேரமும் இருப்பது....

''ஏன்?...மாணிக்கண்ணே! நீங்க இன்னும் சாப்பிடல்லியா?''

மாணிக்கத்தின் முகம் திரும்பி......ஒருவித கோணலாக மாறிக்கொண்டு வந்தது;

''போடா!....போ!......இவர் பெரிய ஆள்! கேக்க வந்திட்டார்!''

அடடே! இரக்கப்படுவதற்குக்கூட ஒரு தகுதி வேண்டும் போலிருக்கே!

பப்பு விலகிச்சென்றான். கடலைச் சுருள்களை விற்று விற்று வந்து அம்மாவிடம் சல்லியைக் கொடுத்தான்.

கால்கள் ஓய்வின்றி நடந்தன

அந்திப் பொழுது வந்தது

மாணிக்கம் ஆறாவது தடவையாக தனது காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். பப்புவுக்குச் சிரிப்பாக இருந்தது -- இந்த ஆளுக்கு விசர்!

''மாணிக்கண்ணைப் பார்த்தாயா? ......எத்தனை தடவ காரைத் தொடைக்கிறது!'' என அம்மாவிடம் காட்டினான்.

''அவனுக்கு வேற வேலையில்ல'' என்று அம்மா பப்புவுக்குச் சொன்னாள். இவ்வாறு இடையிடையே காரைத் துடைத்து தனது சோம்பலைத் தீர்க்கிறானோ, அல்லது பொழுதைப் போக்குகிறானோ என்பது தெரியாது

பொழுது போய் விட்டதுதான்.

பஸ் நிலையத்தில் சனநடமாட்டம் குறையத் தொடங்கியது. பப்பு அம்மாவின் முதுகிற் சாய்ந்திருந்தான்.

''பப்பு!''

அவன் இந்த உலகத்தில் இல்லை தனது கார் எப்படியிருக்கும் எனக் கற்பனை செய்து கொண்டிருந்தான்

''இந்தா!......கடைல போயி!......சோறு வாங்கிக்கிணு வா!''

நெஜம்மாகவா!

ஸ்விச் போட்டது போலப் பப்புவின்முகம் டக்கென ஒளிர்ந்து பிரகாசித்தது மலர்ச்சியுடன் அம்மாவைப் பார்த்தான்......இல்லை......அம்மா தன்னோடு விளையாடுகிறாளா!

அம்மா அவனிடம் காசைக்கொடுத்தாள் கடலையை பெட்டியுடன் கொட்டி விட்டு சட்டியையும் கொடுத்தாள்,

பப்பு எய்த அம்புபோலப் பறந்தான்

சட்டியை இரு கைகளாலும் பிடித்து ஸ்ரெயறிங் போலத் திருப்பித்...திருப்பி ..ர...ர்ர்ர்....ர்ர்—அவனது கார் ஓடியது

கார் நேராக சாப்பாட்டுக் கடைக்குள் போய் நின்றது — 'போம்! போம்!, ஹோன் அடித்தது!

ஹோன் சத்தத்தில் கடைக்காரர் அவனை விசித்திரமாகப் பார்த்தார்

அவரது பார்வையை அலட்சியம் செய்தவாறே மேஜையில் காசை வைத்தான்.

''சோறு!''

''இவனுக்கு ஒரு பார்சல் சோறு கொடு!'' என அவர் உள்ளே குரல் கொடுத்தார்.

பப்பு உள்ளே போய் சட்டியைக் கொடுத்தான். சட்டியில் சோற்றையும் கறியையும் நிரப்பிக் கொடுத்ததும், பக்குவமாக தன்இரு கைகளாலும் தூக்கி வந்தான்.

வெளியே வந்ததும் தனது காரை ஸ்ராட் செய்தான்.

''ர்......ர்ர்ர்......ர்ர்......''

நல்ல அழகாகச் சுழட்டி வெட்டினான். திருப்பிக் கொண்டு மாணிக்கத்தின் காருக்கு அண்மையிற் போனான். நிறுத்தி..... திருப்பிப் பார்த்தவாறு லாவகமாக றிவேஸ் எடுத்தான் ஒரு கார் மட்டும் போகக்கூடிய இடைவெளியில்! அவனது கால்கள் காரின் ரயரைப்போல உருண்டன.

"டே.... டேய்!... அங்காலைபோ!' காருக்குள்ளிருந்தவாறே மாணிக்கம் கத்தினான். பப்பு எதையும் கேட்கத்தயாராயில்லை. ஒரு பிரேக் போட்டுக் குலுங்கி நின்று...பின்னர் மெல்ல மெல்ல றிவேஸ் எடுத்தான்"

— டடிங் —

பெற்றோல் போத்தலுடன் வெளியே வைத்துவிட்டு காருள் ஏதோ செய்து கொண்டிருந்த மாணிக்கம் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான் போத்தல் பப்புவின் காலிற் தட்டுப்பட்டு......பெற்றோல் முழுதும் நிலத்தில் சிந்தியிருந்தது:

ஓரே பாய்ச்சல்

பப்பு ஓடுவதற்கு எத்தனிக்க —
மாணிக்கம் கையைச் சோரவிட்டு விளாசினான்.

நல்ல அறை பப்பு நிலைகுலைந்து விழுந்தான்;

சோறு முழுதும் நிலத்தில் சிதறி......மண்ணோடு கலந்தது.

''அம்மா...!''

பப்பு மூச்சடக்கி அலறினான்:

ரோட்டில் படுத்திருந்த ஒரு அகதிநாய் சோற்றைக் கண்டதும் எழுந்து ஓடிவந்தது:

பப்பு அதற்கு முந்திக் கொண்டு எழுந்து சோற்றைக் கூட்டி அள்ளி சட்டியில் போடத் தொடங்கினான்: அழுது....அழுது......சோறு முழுவதையும் அவன் அள்ளும் வரை அந்த நாய் அவனையே பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதற் பரிசுக் கதை

# 'எரியும் தளிர்கள்'

செல்வி சந்திரா தியாகராசா

## ஓவியத்துக்கு ஒரு கதை

''ஓவியத்துக்கு ஒரு கதை'' போட்டியில் முதல் மாதத்திற்குரிய பரிசை செல்வி ஈழப்பிரியாவும் இரண்டாம் மாதத்திற்குரிய பரிசை செல்வி ஆதிலட்சுமி இராசையாவும், தை மாதத்திற்குரிய பரிசை செல்வி சந்திரா தியாகராசாவும் பெற்றுள்ளார்கள். இவர்களது ஆக்கங்களான 'தியாகம்' 'ஒரு தென்றல் புயலாகிறது' 'எரியும் தளிர்கள்' ஆகியன. புறநானூற்றுக்கால வீரப்பெண்மணிகளை எமக்கு நினைவூட்டுகின்றன.

இலைமறை காயாய் கிடக்கும் ஈழத்து இளம் எழுத்தாளர்களை தட்டியெழுப்பி முன்னணிக்கு கொண்டு வருவதே சிரித்திரனின் குறிக்கோளாகும்.

எழுத்தாளப் பெருமக்களே தங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி தங்களின் பெயர்களை ஈழத்து இலக்கிய உலகில் பதிப்பதற்கு கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் அவர்கள் அளிக்கும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

'மருதானை' புகையிரத நிலையத்தில் கால் வைத்த பொழுது, நிலைய அதிபரின் 'விசில்' ஊதி ஓய்ந்தது!

கனகராயர் 'செக்கிங் பொயின்ஸ்' (சோதனைத்தலம்) ஐயும் கடந்து அவசரம் அவசரமாக யாழ்தேவிக்குரிய நிலைய மண்டபத்தை அடைந்த போது, புகைவண்டி பெரிய 'இழுபறி' இரைச்சலோடு நகர ஆரம்பித்திருந்தது; மூச்சிரைக்க ஓடிவந்தவர், கையிலிருந்த 'சூட்கேஸ்' உடன் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் தாவி ஏறினார்!

'அப்பாடா......!'

கடவுளேயென்று வெறுமையான ஆசனங்கள் மூன்று. நான்கு கண்களில் பட்டன! ஓரமாகவுள்ள ஒரு ஆசனத்தில் ஆசுவாசமாக அமர்ந்து கொண்டவர் சுற்முற்றும் பார்வையைச் செலுத்தினர். பொட்டு வைத்த முகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் எவற்றையோ ரசித்துக் கொண்டிருக்க, அறிமுகமற்ற ஆண் முகங்கள் இடையிடையே தெரிந்தன.

புகைவண்டி காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது; கிழக்கு மூலையில், வானத்தில் சிவப்பாகச் சூரியக்கதிர்கள் சிரிக்க ஆரம்பித்திருந்தன. வேகமாகப் பின்னால் நகர்ந்து கொண்டிருக்கும் வயல்கள், தோட்டங்கள், தென்னந் தோப்புகள்......!

காலையில், வேளையோடு எழுந்த அசதியில் 'கொட்டாவி' ஒன்று வந்து உடலை உலுக்கியது! இருந்தாலும் 'பென்ஷன்' அலுவல்கள் யாவற்றையும் பூரணமாக முடித்துக் கொண்டு திரும்புவதில் ஒரு திருப்தி!

'இனியென்ன...... வீட்டோடை இருந்து, குமருகளின்ரை அலுவலைப் பார்க்க வேண்டியதுதான்; மனுசி செல்லத்துக்கும் உதவியாய்......'

ஊருக்குப் போவதில்தான் எத்தனை உற்சாகம்; 'ஷெல்' விழுந்தாலென்ன...பீரங்கிமுழங்கினுலென்ன... பிறந்த மண்ணின் சுகமே ஒரு தனிசுகம் தான்!

'இவ்வளவு காலமும் குடும்பப் பொறுப்பைச் செல்லம் கவனித்து வந்தாள்; இனிமேல், நானும் அவளோடை சேர்ந்து கவனிக்கலாம்; கடைசிக்காலத்திலை அவளுக்கும் ஆறுதல் வேணும்தானே?

'மூத்த குமரை புத்திசாலித்தனமாய் செல்லம் கரை சேர்த்திட்டாள்; மூத்தவன் பெடியனோடை போனதும் ஒருவகையிலை திருப்திதான்; எங்களாலை இயலுமானளவு பங்களிப்பை நாங்களும் செய்யத்தானே வேணும். இளையவன் படிச்சுக்கிடிச்சு உத்தியோகமாயிட்டான் எண்டால், மற்றவளை ஒரு மாதிரிக் கரை சேர்த்திடலாம். கடைசிரெண்டு குமருகளுக்கும் காலங்கிடக்குத்தானே - கடவுள் ஏதோ வழிவிடுவான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகராயரின் கண்கள் ஜன்னலினூடாக வெளியே இயற்கையை மேய்ந்து கொண்டிருந்தாலும் மனம் முழுவதும் எதிர்காலக் குடும்பத்திட்டத்திலேயே லயித்திருந்தது!

சூரியன் முகம்காட்டத் தொடங்கி நீண்டநேரமாகி விட்டிருந்தது;

"தெல்கரி......தெல்கரி...;" என்ருமிட்டாய்க் கூடையுடன் ஒருவன் சிங்களத்தில் கூவத் தொடங்கியிருந்தான்.

'என்னுச் சாப்பாடு எண்டால் செல்லத்துக்குச் சரியான ஆசை. ஆனல் இதை எப்பிடி வாங்கிப்போறது?; ஊருக்குப் போன பிறகு, எல்லாம் ஆறுதலாய் விரும்பினதுகளைச் செய்யலாம்; இனிநான் அவளோடைதானே?'


புகைவண்டி 'மாகோ'வில் நின்று, நகர ஆரம்பித்த போதுதான், தன்னையுமறியாமல் நித்திரையாகி இருந்தவர் திடுக்குற்று எழுந்து நேரத்தைப் பார்த்தார். காலை 9-30 மணி ஆகிவிட்டிருந்தது! மெதுவாக வயிறு அழ, எழுந்து 'பவெற்' (சாப்பிடும் இடம்) றுக்குப் போனுர். வடை, தேனிரோடு காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் வந்து அமர்ந்த போது, பத்திரிகைகள் விற்கும் பையனெருவன் பக்கத்தில்நின்று விளம்பரம் செய்வது தெரிந்தது. கனகராயர் திரும்பி 'வீரகேசரி' யொன்றை இழுத்து எடுத்தார்.

'யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ மோதலில் 8 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்" அரசாங்கம் அறிவிப்பு' — பெரிய தலைப்புச் செய்தியில் சிலிர்த்துப்போன கனகராயர் இறந்தவர்களின் பெயர் விபரங்களை அவசரமாகத் தேடினுர். ஒருவித நிம்மதியின் மத்தியிலான பெருமூச்சு! - மனதில் இனம்புரியாதவொரு பாரம்!

'என்ரை குலக்கொழுந்தை கடவுள்தான் காப்பாற்ற வேணும்; எவ்வளவோ கஷடப்பட்டுப் படிப்பித்து ஆளாக்கி விட்டன், குமருகளைக் கரை சேர்க்க முடியாமல் தத்தளித்து அவனை ஒருவகையாய் நம்பியிருந்தன்; போனவன் போயிட்டான் . கடைசிவரைக்கும் சலிக்காமல் அவன் போராட வேண்டும்.

நீ யோசியாதைராசா; உன்ரை அப்பனும் தம்பியும் உயிரோடைதானே இருக்கினம். தங்கச்சிமாருக்குக் கை கொடுக்காமலே போடுவினம்......" ஆறுமாதங்களுக்கு முன்னர் ஏதோ அலுவலாய் மூத்தவன் வந்து, தனக்குள் கவலைப்பட்ட பொழுது, செல்லம் அழுகையோடு அழுகையாக அவனுக்கு ஆறுதல் கூறியது அவர் ஞாபகத்தில் வந்தது' மனம் இரகசியமாய்க் கரைந்தது.

நீண்டமன ஒட்டங்களின் மத்தியிலே 11 - 30ற்கு வவுனியாவிற்கு வந்து சேர்ந்த புகை வண்டியிலிருந்து இறங்கி, ஓடிப்போய், 'பஸ்' இல் ஆசனம் பிடிப்பதற்கிடையில் போதும் போதுமென்ருகி விட்டது அவருக்கு!



□ கூழாவடியில் குண்டு போட்டாங்களாம்......
● ஓம் போட்ட குண்டுகள் அத்தனையும் கூழாப் பேர்ச்சுதாம்

வவுனியா தடைமுகாம், ஓமந்தைத் தடைமுகாம், ஆனையிறவுத் தடைமூகாம் ஆகிய பகுதிகளில் இறங்கி, நடந்து ஊர்வலம் போனதில் மூட்டுமூட்டாக வலியெடுத்திருந்தது! முல்லைத்தீவுப் பாதையின் சிறப்பினுல், இடுப்பு ஒடிந்துவிடும் போலிருந்தது!

வீட்டுக்குப்போன உடனே, இளையவனை ஒருக்கால் மணியன்கடைக்கு அனுப்பி, ஒரு 'கால்' எடுதது அடித்தால்தான் இந்த அலுப்புப் போகும்,

கனகராயர் ஊர் மண்ணைக் கண்டதும் உசார் நிலைக்கு வந்துவிட்டார். பசியும், களைப்பும்மாறி உடல் தேறிவிட்டது போன்ற உணர்வு!

தனக்குரிய 'பஸ்' தரிப்பில் இறங்கியவர் சுற்றுமுற்றும் பார்த்தார். சந்திக்கடை வாசலில் செல்லம்! தேங்காயோடு நின்றிருந்தாள்!

"செல்லம்......"

திடுக்குற்றவள் "வருவியள் எண்டு நினைச்சனுன்; கரகம் கத்தினது......" அலுக்காமல் சிரித்தாள், கன்னம் இடிந்து, கண்கள் குழிவிழுந்தமை இப்போ அதிகமாகித் தெரிந்தது!

"அதுசரி...ஒருநாளும் கடைப்பக்கம் காலடி வைக்காத நீ இண்டைக்கு என்ன புதினமாய்......?"

"தேங்காய் வாங்க வந்தனுன்......" மூடி மறைக்கும் ஒரு சோர்வு!

"ஏன்.........இளையவனுக்கென்ன இப்ப ஏ. எல் எக்ஸாம் (பரீட்சை) முடிஞ்சு 'லீவு' தானே? அம்மாவைக் கடையடியிலை காய வைக்கிற அளவுக்கு அவருக்கு வேலையோ?" செல்லம் தலையைக் குனிந்து கொண்டாள்

காதருகில் சிவப்பாகக் கன்றிப்போய்...!கனகராயருக்குச் சுருக்கென்றது.

"என்ன இது காதடியில......காயம்?"

"அது சும்மா......விறகு கொத்துற போது......" சொடுக்கென்று அரை குறையில் வார்த்தையை அடக்கிக்கொண்ட செல்லம் மெல்ல நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இனிமேல், ஊரோடைதானே: எல்லாரை யும் வைச்சிருக்கிற இடத்திலை வைத்திருந்தால் இருந்து வினம். அப்பன் ஊரிலை இல்லாட்டில் அம்மாவுக்கு வாலாட்டப் பார்க்கிருங்கள்......"

வீடு அண்மித்தது. சுருக்கென்று உள்ளே நுழைந்த செல்லம், வாசலுக்கு வந்ததும், அடக்கிவைத்திருந்த தெல்லாம் வெடித்து விடுவது போல் விம்மி விம்மி அழத்தொடங்கினுள்!

"செல்லம்?...என்ன இது?......இப்ப என்ன நடந்தது?"

"இளையவன்....இளையவனும் போயிட்டானப்பா; அங்கைபோய் காலில விழுந்துகூடக் கேட்டுப்பாத்தன் அவையள்கூட எங்கடை மூத்தவன் இருக்கிறதைப் பற்றிச் சொல்லிக் காட்டி, புத்திமதி சொல்லிப் பாத்தவை; அவன் 'முடியாது' எண்டிட்டான்"

வாய்பேச முடியாமல் உறைந்து போனவருக்கு வாசலோடு ஓட்டியவாறு, வரிசையாக, வளைந்து நிற்கும் மூன்று குமருகள் மட்டும் தெரிந்தது!

முற்றும்



ஒருவர்: நான் கடும் கொடும் நெடும் குடும்பக் கட்டுப்பாட்டு விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டேன.

மற்றவர் ஏன்?

ஒருவர்; பள்ளிக்கூடத்தில் பிள்ளைக்கு இடமெடுப்பதில் கஷ்டமெல்லாம் அனுபவித்து முடித்திட்டன்.



## முக்கிய குறிப்பு

சிரித்திரன் பேனுநண்பர் கழகத்தில் சேர விரும்புபவர்கள் கீழ்வரும் கூப்பனை பூர்த்தி செய்து 5/- ரூபா முத்திரை இணைத்து அனுப்பி கழக அங்கத்தவராக சேர்ந்து கொள்ளுங்கள்

சு. விமலேந்திரன் வயது 18
வேலணை கிழக்கு, வேலணை - 5
மாணவன்
உடற்பயிற்சி, விளையாட்டு.

M. M. AJMAL வயது 25
291[19 Havelock Road, Colombo - 6
பொன்மொழி சேகரித்தல், கவிதை, வானெலி

T. THUSI
"Anbumilal" Vilathiady Road,
Urumbirai North.
T. V. Stam, View Card, Jents;

க. சுரேந்தினி வயது 17
குமரபுரம், முள்ளியவளை,
மாணவி
முத்திரை, பேனுநண்பர், V. Deo, கவிதை, சிறுகதை

T. கிருஷ்ணபிள்ளை வயது 23
53-55, செட்டியார் தெரு, கொழும்பு - 11
பொற்ருெழில்
T. V. கிரிக்கட் விளையாடுதல்

N. SATGUNASEELAN வயது 21
1St, Lane, Mullaithivu Rd, Paranthan;
Student
Reading, Sports

S. PAVAN வயது 20
Valalai West, Valalai, Atchuvely.
Student
Reading, T. V; Pen Pals

பி. இரத்தினம்பிகை வயது 15
வீரபத்திரர் கோவில் கோப்பாய் தெற்கு,
படிப்பு
தையல், முத்திரை சேகரித்தல்,

R. SANTHIRARAJAN வயது 2Ⅰ
11, Rue De Chartres - 75018 France
எலக்ரீசன்
T. V, பார்த்தல் வானெலி கேட்டல்

## சிரித்திரன் பேனு நண்பர்

பெயர்.......................................................

விலாசம்.......................................................

.......................................................

பொழுது போக்கு.......................................................

தொழில்...........................வயது.......................

கையொப்பம்.......................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

463, காலி வீதி,
கொழும்பு--3
போன்: 9190

82, கன்னதிட்டி வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 24310

## மக்கள் விரும்பும் பிஞன்ஸ் கொம்பனி

வீட்டுப் பொருட்கள் -- கடன் கொடுப்பனவு
வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்
படவிநியோகஸ்த்தர்கள்
உல்லாச பஸ் சேவையாளர்
காணி நிலமுதலீட்டாளர்
கட்டிடக் கொந்தராத்துக்காரர்
புடவை விநியோகஸ்தர்

அனைவருக்கும் சேவை செய்கிறது

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
வளர்ந்து வருவது

## ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

கிளை: தலைமையகம்:

ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

இல: 82, கன்னதிட்டி
யாழ்ப்பாணம்

463, காலி வீதி,
கொழும்பு -- 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயுள்காக்கும் வேப்பமரம் நடுவே

நாம் சுவாசிக்கும் காற்று இன்று அசுத்தமாகிக் கொ
ருக்கிறது. வேப்ப மரங்களை வளர்த்து அங்கு நில
காற்றை சுவாசித்து ஆரோக்கியம் பெறுவோம்
பதார்த்த குணசிந்தாமணி வேப்பமரத்தின்
வைத்திய மாண்பைப் பெரிதும்
பாராட்டுகின்றது.

## நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதி வந்து உங்க
பொன்னை மேனியில் ஊசி
போடுகிறதா?

ஒன்று செய்யுங்கள் சாம்பிராணி புகைப்பது போல
**"மில்க்வைற் நீம் தூபத்தை"**
புகைத்துப் பாருங்கள்.

நீம் சுகாதார தூபம் எங்கும் விற்பனையாகின்றது.

ஒரு பைக்கற் விலை 50 சதம் மட்டுமே!

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.

☎ 23233

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது பதிவு இல. Q J 35 (N) 83
● 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் திரு. வேலுப்பிள்ளை சுந்தரம் அவர்களால்
● 550, கே. கே. எஸ். வீதியில் உள்ள சிரித்திரன் அச்சகத்தில அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org